Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 05 திங்கட்கிழமை (19.05.2014) பக்கங்கள் 20 ஓசை –230

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

### போலியாக அஞ்சலி செலுத்த முயன்ற

## கூட்டமைப்பு உறுப்பினர்களை விரட்டியடித்த பொதுமக்கள்



(நல்லூர்)

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நேற்று மாலை எவ்வித முன்னறிவித்தலுமின்றி உள்நுழைந்து போலியாக அஞ்சலி செலுத்த முயன்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களை

(19) ஆம் பக்கம் பார்க்க

## கீரிமலை பிதிர்க்கடன் நிகழ்வை அரசியலாக்க முயன்ற கூட்டமைப்பு

### துவாரகேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இறுதி யுத்தத்தில் உயிரிழந்த அனைவருக்குமான பிதிர்க்கடன் நிகழ்வு எவ்வித அரசியல் பேதமுமின்றி நேற்றைய தினம் கீரிமலையில் நடைபெற்ற வேளை அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியலாக்க முயற்சி செய்துள்ளதாக இதனை ஏற்பாடு செய்த தியாகராசா துவாரகேஸ்வரன் குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இறுதி யுத்தம் நிறைவடைந்த தினமான நேற்று அதில் உயிரிழந்த அனைவருக்குமான பிதிர்கடன் செலுத்துவதற்கு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை, அபிஷேகம் என்பன என்னால் ஒழுங்குபடுத்தப்பட்டு நேற்றுக்காலை 6.30 மணிமுதல் 7 மணிவரையும்

(19) ஆம் பக்கம் பார்க்க

# நல்லிணக்கத்திற்குரிய நாளாக போர் வெற்றி விழா மாறவேண்டும்

### சண்டே ரைம்ஸ் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் வருடமொரு முறை கொண்டாடப்படும் போர் வெற்றி விழாவினை நல்லிணக்கத்திற்குரிய நாளாக மாற்ற வேண்டுமென கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் வார இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைப் படையினர் போர வெற்றியின் ஐந்தாம் ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றனர்.

எனினும் போருக்குப் பின்னர் சமாதான முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டதா என்பது கேள்விக்குரியதாகும்.

போர் வெற்றி கொள்ளப்பட்டது. பயங்கரவாதிகள் தோற்கடிக்கப்பட்டனர். எனினும் சிங்களவர்களும் தமிழர்களும் சமாதானமாகவில்லை.

மேற்கத்தைய நாடுகள் போரில தோல்விகண்ட நாஸிஸ் மற்றும் பாஸிஸவாதிகள் தமது தோல்வியை அனுஷ்டிக்க வழிவிடவில்லை. இதனை கொழும்பிலுள்ள பல தூதுவர்கள் மறந்துவிட்டனர்.

எனினும் இலங்கையில் போர வெற்றிநாளை நல்லிணக்கத்துக்கான நாளாக மாற்ற வேண்டும்.

தொடர்ந்தும் போர் இருக்குமானால் இரண்டு சமூகங்களும் இணைந்து வாழமுடியாது. எனவே போர் வெற்றியை நல்லிணக்கமாக கொண்டு வருவது எவ்வாறு என்பதை ஆராய வேண்டும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி இன்று சீனாவிற்கு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் சீனாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

சீனாவில் இடம்பெறும் ஆசிய ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு செல்கிறார்.

இதில் 24 உறுப்பு நாடுகளும், 9 கண்காணிப்பு நாடுகளும் கலந்து கொள்ளவுள்ளன.

இந்த மாநாட்டில் ஐக்கிய

(19) ஆம் பக்கம் பார்க்க

## நடைபெற்று முடிந்த யுத்தம் தமிழருக்கு எதிரானது அல்ல

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று முடிந்த யுத்தம் தமிழருக்கு எதிரானது அல்லவென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற யுத்த வெற்றி நாள் விழாவின் ஐந்தாண்டு நிறைவு தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் சிங்களத்திலும் தமிழிலும் ஜனாதிபதி உரையாற்றினார். குறிப்பாக தமிழில் உரையாற்றிய அவர்,

நடைபெற்று முடிந்த யுத்தம்



பயங்கரவாதத்திற்கு எதிரானதே தவிர, தமிழ் சகோதரர்களுக்கு எதிரானது அல்ல என்றும் 30 வருட பயங்கரவாதத்தினால் நாட்டில் சகல இன மக்களும் வேதனைகளை அனுபவித்தார்கள், குறிப்பாக தமிழ் மக்கள் பட்ட கஷ்டங்கள். துன்பங்கள் சொல்ல

(19) ஆம் பக்கம் பார்க்க

## போர் வெற்றி கொண்டாட்டம் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல்

### கூறுகிறார் சொல்ஹெய்ம்

இலங்கையின் போர் வெற்றி கொண்டாடப்படுவது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலான விடயமென நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சிறப்புத்தூதர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானத்துக்காக கொண்டாட்டங்களுக்காக காரணம் இருக்கிறது. இதன் மூலம் வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியும்.

எனினும் போர் வெற்றியால் வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியாது.

இலங்கையில் போர் நிறைவடைந்து 5 வருடங்களாகியும் இன்னும் சிறுபான்மையினரின் சமய வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

தமிழர்களுக்கான அபிலாஷைகள் நிறைவேற்றப்படவில்லை.

ரணிலின் ஆட்சியிலும் சந்திரிகாவின் ஆட்சியிலும் சமாதானத்துக்காக முழுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமாதானம் என்பது இலகுவாக கிடைப்பதில்லை. எனினும் இன்னும் அதற்காக முழுமையான பங்களிப்பை வழங்கினால் வெற்றிபெறலாம்.

2006 ஆம் ஆண்டு அன்ரன் பாலசிங்கம் இறந்த பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

### இன்று இலங்கை வருகிறார் ஐ.நா. மனித உரிமை பிரதிநிதி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பேரவையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி பென் கொய்ஸ் கிரேப்யூ இன்றைய தினம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இவர் 8 நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளார்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் அரச பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசவுள்ளார்.

இலங்கை விஜயத்தின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மர்மப்பொருள் வெடித்து படுகாயமடைந்த சிறுவன்

### கிளி. திருநகரில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில் மர்மப்பொருள் வெடித்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

திருநகரினைச் சேர்ந்த மாணிக்கதியாகராஜா விஜயயாதவன் (வயது - 12) என்ற சிறுவனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த சிறுவன் வியாபார நிலையமொன்றில் பொருட்கள் வாங்கச் சென்றுள்ளார். சென்ற

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா.வின் விசாரணைக்கு பதிலளிக்க பாக். சட்டத்தரணி

### அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை விசாரணைகளுக்கு பதிலளிப்பதற்கு அரசாங்கம், பாகிஸ்தான் சட்டத்தரணியை நியமிக்கத் திட்டமிட்டுள்ளது. 70 வயதான அட்டிஸாஸ் அஷேன் (Aitzaz Ahsan) என்ற சட்டத்தரணியே இவ்வாறு இலங்கையின் சார்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் வாதிட உள்ளார்.

சட்டத்தரணி அஷேன் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சட்ட உதவிகளை வழங்குமாறு இலங்கை ஜனாதிபதி

(19) ஆம் பக்கம் பார்க்க

க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான
விஞ்ஞான பாட பயிற்சிகள்
உள்ளே

முல்லை - கொக்கிளாய்

# சீரற்ற பேருந்துச் சேவையால் எட்டு கிராம மக்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து கொக்கிளாய் வரை பேருந்து சேவைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இச்சேவையில் சீரற்ற தன்மை காண்ப்படுவதாக கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து கொக்கிளாய்க்கு இடைப்பட்ட பகுதியில் 8 கிராமங்கள் உள்ள நிலையில் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது சகல தேவைக்காகவும் வெளியிடங்களுக்குச் செல்வதற்கு இப்பேருந்து சேவைகளையே நம்பியிருப்பதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இப்பிரதேசத்திற்கு 3 அரச பேருந்துகளும், 3 தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபடுகின்றன. எனினும் இச்சேவைகள் சீரற்றதாக இருப்பதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

சேவையில் ஈடுபடும் பேருந்துகள் நேரம் தமதமாக வருவதாகவும், ஞாயிற்றுக்கிழமைகளில் அரச பேருந்துகள் இரு தடவைகளே சேவையில் ஈடுபடுவதாக தெரிவிக்கும் மக்கள் இதனால் தமது அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், கூலி வேலை செய்வோர் ஆகியோர் பெரும் நெருக்கடிக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த எட்டு கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு அத்தியாவசிய தேவையாகவுள்ள போக்குவரத்துச் சேவைகளை சீரான முறையில் சேவைகளை வழங்குவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (67)

# குழிக்குள் வீழ்ந்து இளைஞர் படுகாயம்

யாழ். கொடிகாமம் மிருசுவில் பகுதியில், மோட்டார் சைக்கிளில் வந்தவர் வீதியோரத்தில் இருந்த குழிக்குள் வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.


மிருசுவில் - தவசிகுளம் பகுதியினைச் சேர்ந்த ஆர்.பார்த்தீபன் (வயது - 18) என்பவரே இவ்வாறு குழிக்குள் வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# இராணுவ வாகனத்திற்கு கல்வீசிய இரு பூசகர்களுக்கு மறியல்

பண்ணைப்பகுதியில் மதுபோதையில் இராணுவ வாகனத்திற்கு கல்வீசியதாக இரு பூசகர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்.பண்ணை வீதியில் வைத்து நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த விவேகானந்த சர்மா துவாரகன் (வயது - 29) தெல்லிப்பளை பகுதியைச் சேர்ந்த சி.பாரதிதாசசர்மா (வயது - 27) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மதுபோதையில் புங்குடுதீவில் இருந்து வந்த இரு பூசகர்களும் பண்ணை வீதியில் சென்ற வாகனம் மீது கல் எறிந்துள்ளனர். கல்வீச்சுக்கு இலக்கான வாகனத்தில் இருந்து இராணுவத்தினர் இருவரையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட இருவரையும் யாழ்.நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது இருவரையும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (25)



**வேலணை, சாட்டி ஜிம்மா பள்ளிவாசலின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு, வேலணை பிரதேச சபையினால் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது தொடர்பில் பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசாவினால் (போல்) ஆராயப்பட்டபோது (21)**

# மோட்டார் சைக்கிள் விபத்து; இரு இளைஞர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீட்டு மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு முன்பாக நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த துசான் (வயது - 23), சரன்ராஜ் (வயது - 26) ஆகிய இருவருமே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)


**சிறுவிளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**

***றீசைக்கிள் (மீள் சுழற்சி)***

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3376)



**INVITATION FOR BIDS**
**TEACHING HOSPITAL, JAFFNA**

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Neurology Surgical Ward | 500.00 | 60,000.00 | 90 | 2.9 | C8 |
| Renovation of Toilets in Ward No 07 & 08 | 500.00 | 36,000.00 | 90 | 1.7 | C9 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 20.04.2014 until at 4.00 pm on 29.05.2014. The payment shall be made to the Shroff 's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 15.00 hrs on 30.05.2014, late bides will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**19/05/2014.**

(C/3383)



**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2529 திகதி 17-05-2014

ஆங்கில எழுத்து: Z

வெற்றி எண்கள்: 04 15 24 25 போனஸ் இல: 41

ஜக்பொட் பரிசு ரூ.15,659,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 196183 | 20/- | 3,923,660/- |
| 2 இல | 14043 | 100/- | 1,404,300/- |
| 3 இல | 274 | 1,000/- | 274,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7773 | 40/- | 310,920/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 573 | 1,000/- | 573,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 19 | 10,000/- | 190,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,659,300/- | - |
| 1 இல + போனஸ் இல | 9343 | 100/- | 934,300/- |
| 2 இல + போனஸ் இல | 434 | 500/- | 217,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 368 | 200/- | 73,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 229037 | | 9,333,780/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.05.21 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 16,194,750/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3674)

# முற்றாக வற்றும் அபாயத்தில் தொண்டைமானாறு கடல்நீரேரி

## மாற்று ஏற்பாடு குறித்து மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் தொண்டைமானாறு கடல் நீரேரி வற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், இதனூடாக ஏற்படப்போகும் பாதிப்புக்கள் குறித்தும் அச்சமடைவதாக இக்கடல் நீரேரியை அண்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தின் இக்கடல் நீரேரியை அண்டியதாக கல்லுவம், மண்டான், சோழங்கன், முதலைக்குளி, கூரவெட்டி ஆகிய கிராமங்கள் உள்ளன.

இந்நிலையில் வறட்சியான காலநிலையால் நீர் வற்றிவரும் நிலையில் மழை பெய்யாது விடின் முற்றாக் வற்றும் அபாயம் ஏற்படும்.

எனினும், பருவநிலை மாற்றத்துக்கமைய மே முதல் ஆகஸ்ட் வரையான மாதங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும்.

இவ்வாறான ஒரு நிலை ஏற்படும்போது காற்றின் வேகம் காரணமாக உப்புச் செறிந்த மண் பாரிய அளவில் அள்ளிக் கொட்டப்படும் அவலம் ஏற்படும் என கிராம மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.


இதனால் விவசாய நிலங்கள், நன்நீர் நிலைகள், கட்டடங்கள் மீது உப்பு மண் படிவதால் விவசாய நிலங்கள் உவர்த்தன்மையாவதுடன், நன்நீர் நிலைகள் அசுத்தமாக்கப்படுவதாகவும்,, இதனால் பாதிக்கப்படுவது நாமே என இக்கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ் அனர்த்தத்தை தவிர்க்கும் வகையில், தொண்டைமானாறு பிரதான பாலத்தில் அமைந்துள்ள மதகைத் திறந்து சமுத்திரத்தின் நீரானது வறண்ட நிலையில் காணப்படும். ஆற்றின்மையப் பகுதிக்குச் செல்ல வளி ஏற்படுத்தி நீரைத் தேங்கச் செய்ய வேண்டும். அல்லது நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளின் ஆலோசனையைப் பெற்று கணிசமான இடைவெளியில் இரண்டு அல்லது நான்கு குழாய்க் கிணறுகளை அமைத்து நீரை இறைத்து விடுவதன் மூலம் நீரைத் தேக்குதல் வேண்டும்.

இவற்றில் ஒன்றை முன்னெடுப்பதன் மூலம் அனர்த்தத்தை தவிர்க்கமுடியும்.

எனவே இவ்விடயம் தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகள் விரைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடு



SDC நிறுவனத்தின் அனுசரணையுடன் காவேரி கலாமன்றம் ஆரம்ப அடிப்படை சுகாதார விழிப்புணர்வு செயற்பாடுகளை பளை முகாவில் கிராமத்தில் மேற்கொண்டுவருகின்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக விவசாய, மருத்துவ, சமூகவியல் பேராசிரியர் கலாநிதி நித்திகனகரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக காவேரி கலாமன்றத்தின் நிறைவேற்று இயக்குனர் வண T.S. யோசுவா அடிகளாரும் பச்சிலைப்பள்ளி முன்னாள் பிரதேச செயலாளரும் காவேரி கலாமன்ற பொருளாளருமான புத்திரசிகாமணியும் கௌரவ விருந்தினர்களாக இயக்கச்சியின் ஓய்வு பெற்ற உபதபாலதிபர் ஆறுமுகம் இராசரத்தினமும், முகாவில் கிராம அலுவலர் சின்னத்தம்பி வல்லிபுரமும் முகாமைத்துவ உதவியாளர் கமலரூபனும் கலந்து சிறப்பித்தனர்.

இறுதி நிகழ்வாக கிராமங்களில் சுகாதார கருத்துக்களை தாங்கிய கலை. நிகழ்வுகள் இடம்பெற்றன. (90)

## மடத்துக்கரை முத்துமாரி அம்மன் மண்டலாபிஷேக நிறைவுவிழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மண்டலாபிஷேக உற்சவ நிறைவு விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது.

மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு அமரர் சிவபாக்கியம் குமாரசாமி . நினைவாக 'அம்பிகை அருளமுதம்' என்ற தோத்திர திரட்டு நூல் இன்று மாலை 6.30 மணிக்கு ஆலய வசந்த மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார். (10)

## "எல்லை நீத்த" நூல் வெளியீடு

(யாழ்.நிருபர்)

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீபிரசாந்தன் எழுதிய கம்பராமாயணக் கட்டுரைத் தொகுப்பு நூல் கடந்தவாரம் புதுச்சேரி கலையரங்கில் இடம்பெற்ற கம்பன் விழாவில் வெளியிடப்பட்டுள்ளது.

வானதி பதிப்பக வெளியீடாக புதுவைக் கம்பன் கழகம் வெளியிட்டுள்ள "எல்லைநீத்த" என்னும் தலைப்பிலான இந்நூலை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.சுந்தரேஸ்வரர் வெளியிட்டு வைத்தார்.

நூலாசிரியர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் கம்பன்விழாவின் பிரதம விருந்தினர் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமியினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (10)

## சிறுமிகள் மீது துஷ்பிரயோகம் சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சிறுமிகள் இருவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவில் இச்சம்பவம் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றதுடன் இதில் 4 மற்றும் 8 வயது சிறுமிகள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

துஷ்பிரயோகம் புரிந்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## வெற்றி விழாக்களும் ஒப்பாரி வைப்புகளும் அவனவன் அரசியல் ஆதாயங்களுக்காகவே....




போர் முடிஞ்சு அஞ்சு வருசம் ஆச்சு. அரசாங்கத்தின்ரை குணத்திலயும் மாற்றமொண்டும் இல்லை. தமிழாக்களின்ரை புத்தியிலயும் மாற்றத்தைக் காணேல்ல. இதால நாட்டிலயும் முன்னேற்றமில்லை. வீட்டிலயும் முன்னேற்றமில்லை. அவனவன் (அமெரிக்கக்காரனும் சீனனும் இந்தியனும் இன்னும் எவனெல்லாமோ) மட்டும் இந்தப் பிரச்சினையை வைச்சுப் பிழைச்சுக்கொண்டு போறான்கள்.

மே மாதம் வந்துதெண்டால் மேதினத்தைக் கொண்டாடிறதையும் விட, யுத்த வெற்றியைத்தான் பெரிசாக் கொண்டாடுது ஒரு கூட்டம். அதைப்போல யுத்த அழிவை நினைத்து அழுகுது ஒரு கூட்டம்.

இதெல்லாம் இந்த நாட்டை இன்னும் இன்னும் ரண்டாக்கிற விசயந்தான்.

ஆரை ஆர் வெற்றிகொண்டது? சரி ஒரு போர் முடிஞ்சுதெண்டால் அதை அதோட விட்டிட்டு ஆகிற காரியத்தைப் பாக்க வேண்டியதுதானே!

அதை விட்டுப்போட்டு கோடிக்கணக்கில காசைச் செலவழிச்சு வருசத்துக்கு வருசம் யுத்த வெற்றிவிழாக் கொண்டாடிறது எண்டால் இது ஒரு சுத்தமான பைத்தியக்காரத்தனமேயில்லாமல் வேற ஒண்டும் இல்லை.

நாட்டில, ஊர்களில செய்ய வேண்டிய காரியங்கள் கனக்க இருக்கு. அதுகளைப் பார்க்கிறதை விட்டுப்போட்டு இப்பிடியான வீண் வேலைகளைச் செய்யிறது ஒரு நாளும் நல்லதுக்கில்லை.

இது இந்த நாட்டில இருக்கிற மற்ற இனங்களை அவமதிக்கிற காரியம்.

இப்பிடியான காரியங்கள் தங்கட தலைக்கு வைக்கிற கொள்ளியாகத்தான் மாறும். அப்பிடித்தான் உலகத்தில நடந்துமிருக்கு.

நாட்டில அமைதியையும் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் கொண்டு வரோணும் எண்டால், அதுக்கு ஒழுங்கான – நம்பிக்கையான முயற்சிகள் நடக்கோணும்.

இல்லாட்டி இந்த நாட்டை பிறத்தியாரிட்டை அடைவு வைக்கிறதிலதான் போய் முடியும்.

இதையெல்லாம் கண்டும் காணாமலும் இருந்தால் எல்லாருக்கும்தான் நாசம்.

இதைப்போல எடுத்ததுக்கெல்லாம் அரசாங்கத்தைக் குறை சொல்லுறதும் மகிந்தற்றை கழுத்தில சுருக்குக் கயிற்றைப் போட வேணும் எண்டு சிந்திக்கிறதும் வாறவன் போறவன் கண்ட நிண்டவன் எண்டு எல்லாரிட்டயும் அழுது புலம்பிறதும் ஒண்டுக்கும் உதவாது.

ஆனால், இதைத்தான் தமிழாக்கள் தங்கட அரசியல்பணி எண்டு செய்யினம்.

இந்தப் பழைய வாய்ப்பாட்டைத் திரும்பத் திருப்ப சொல்லிக் கொண்டிருக்கிறதால எதுவும் நடக்கப்போவதில்லை. இன்னுமின்னும் தமிழாக்கள் கண்ணீர்க்கடலில்தான் நீந்த வேணும்.

தமிழாக்கள் வெற்றியைக் கொண்டாடிறதுக்குப் பதிலாக எப்ப பார்த்தாலும் துக்க நாட்களைக் கொண்டாடுற ஒரு கூட்டமாக மாறிவிட்டினமோ எண்டு யோசிக்கிறன்.

எப்ப பார்த்தாலும் அழுது புலம்பிறதும் துக்கநாட்களையே நினைச்சுக் கொண்டிருக்கிறதும் உருப்படுறதுக்கு வழியைத் தரும் எண்டில்லை.

துக்கத்தில இருந்து மீண்டெழுறதைப் பற்றிச் சிந்திக்க வேணும்.

அழிவில இருந்து முளைச்செழுகிற மாதிரி நடக்கவேணும்.

அப்பதான் தமிழினம் முன்னேறும். ஆனால், அப்பிடிச் சிந்திக்கிறமாதிரித் தெரியேல்ல.

'சவப்பெட்டி அரசியற் சிந்தனையில இதுக்கெல்லாம் இடமிருக்காதப்பா' எண்டு சொல்லிறார் ஒரு நண்பர்.

சவப்பெட்டி அரசியலைச் செய்தால், அந்த அரசியல்தான் வேணுமெண்டால், சவப்பெட்டி வாழ்க்கைதான் கிடைக்கும்.

எண்டபடியாலதான் சொல்லிறன், ஆளையாள் குறை சொல்லிக் கொண்டிருக்காமல், அரசியல்வாதிகளின்ரை கையில தங்கட உயிர், உடமை, எதிர்காலம், நிகழ்காலம் எல்லாத்தையும் குடுத்துப்போட்டு, அவையள் எல்லாத்தையும் பாப்பினம் எண்டிருந்தால், நாளைக்கு படு மோசமான இடத்திலதான் போய் நிக்கோணும்.

இந்த இலங்கைத்தீவு இந்தப் பூமியின் சொர்க்கம் எண்டு முந்திச் சொல்லுவினம். அப்பிடியான சொர்க்கத் தீவை நாங்கள் நரகத்தீவாக வைச்சிருக்க வேணுமா?

அரசியல்வாதிகளை அடக்கி ஆளக்கூடிய ஆற்றல் ஒவ்வொரு பழச்ச மனிசருக்கும் சமூகத்தில இருக்கிற ஒவ்வொருத்தருக்கும் உண்டு.

அதை உணர்ந்து அவரவர் கொஞ்சம் விழிப்பாக நடந்தால் அரசியல்வாதிகள் எங்களில (சனங்களில) குதிரையோட முடியாது.

இந்த வெற்றி விழாக்களும் ஒப்பாரி வைப்புகளும் அவனவன் தங்கட அரசியல் ஆதாயங்களுக்காகச் செய்யிற காரியங்கள்.

இதுக்குப் பின்னால சிங்களவர் நிண்டாலென்ன தமிழர்கள் நிண்டாலென்ன, அது ஒண்டுக்கும் நல்லதல்ல.

இதுவரை போனதெல்லாம் போகட்டும். இனியாவது நல்லது நடக்கட்டும் எண்டு நாங்கள் களத்தில் இறங்குவம். இந்தப் பொய்க்குதிரைகளுக்கு ஒரு பாடம் படிப்பிப்பம்.

இது யுத்தம்முடிஞ்சு ஐஞ்சு ஆண்டு முடிவு மட்டுமல்ல. நாங்கள் (சனங்கள்) களத்திலிறங்கிற முதலாவது அடியாகட்டும். முதலாண்டின் தொடக்கமாகட்டும்.

வாருங்கள் நண்பர்களே... ஒன்று சேருங்கள் தோழர்களே... புதுயுகம் நோக்கிப் பயணிப்போம்...

ஒரு தவறை திரும்பத் திரும்பச் செய்வது மடமை, மடமையை திரும்பத் திரும்பச் செய்பவன் எப்படி முழு மனிதனாக முடியும்?
-பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ் ரோசத்தைக் கைவிடோம்!

இலங்கையில் நடந்து முடிந்த போர் பற்றி அமெரிக்க ராணுவ ஆய்வாளர் ஒருவர் எழுதியிருந்ததைக் குறிப்பிட்டு நண்பர் தொலைபேசியில் பேசும்போது சொன்னார்.

இலங்கையில் நடைபெற்ற போரில் வென்ற தரப்பு, தோற்ற தரப்பு என்று கறாராகத் தெரியும்படி போர் முடிவுற்றிருப்பதாகவும், இந்த நிகழ்விலிருந்து தங்களது இடங்களில் பயங்கரவாதத்தை முறியடிக்க விரும்பும் நாடுகளுக்கு பாடமாகக் கற்றுக் கொள்ள நிறைய இருப்பதாகவும் அவர் எழுதியிருக்கிறாராம்.

மேலும், இப்படி வெற்றி தோல்வி நிச்சயமாகத் தெரியும்படி முடிக்கப்பட்ட போரின் பிறகு, வென்ற தரப்புக்கு போருக்குப் பிறகான நல்லிணக்க முயற்சிகளை மேற்கொள்ள அவசியம் இருக்கிறதாகத் தென்படாது என்றும், தென்னாபிரிக்காவில் தேசிய காங்கிரசுக்கு இருந்த நல்லிணக்கம் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் என்கிற தேவை இலங்கைக்கு இராது என்று அந்த அமெரிக்க ராணுவக் கட்டுரையாளர் சொல்கிறாராம்.

அப்போ... இலங்கையில் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்த வேண்டுமென இலங்கை அரசுக்கு நெருக்குதல்கள் கொடுப்பதை அமெரிக்காவும் கைவிட்டு விடுமா என்று கேட்டேன்.

நண்பர் அந்தப் பக்கம் சிரித்துக்கொண்டே, "அமெரிக்கா எப்போது அதையெல்லாம் சீரியஸாகக் கையிலெடுத்திருப்பதாகச் சொன்னது, இப்போது கையை விடுவதற்கு...?" என்று கேட்டார்.

பிறகு அவர் சிரியஸாகி சொன்னார்: "அமெரிக்க ராணுவத்தினரைப் பொறுத்தவரை, இலங்கை ராணுவத்திடமிருந்தும் அதை வழிநடத்தியவர்களிடம் இருந்தும்தான் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் இருப்பதாகக் கருதுகிறது. அந்தவகையில் போரை வெற்றிகரமாக முடித்ததற்காக இலங்கை ராணுவ அமைப்பிடம் பாராட்டுணர்வுடன் இருக்கிறார்களே தவிர, தமிழ் மக்களின் பழி தீர்க்கும் உணர்ச்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்..." என்றார்.

இதை நம் தமிழ்த் தலைவர்களிடமும் தமிழ் ஊடகங்களிடமும் சொல்லி, கொஞ்சம் சிந்திக்க முடியுமா கேட்டுக் கொண்டால் அவர்களிடமிருந்து என்ன பதில் வரும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

"நடந்தது இன அழிப்புத்தான் என்பதை சர்வதேசம் விளங்கிக் கொண்டு வருகிறது.... நாங்கள் இலங்கை அரசையும் சிங்களவர்களையும் பழிவாங்குவதற்கு அவர்கள் உதவும் காலம் கனிந்து கொண்டு வருகிறது.... நவனீதம்பிள்ளை அம்மாவின் அறிவிப்புகளைக் கவனமாகச் செவிமடுத்து வாருங்கள், இலங்கை அரசைத் தண்டனைக்குட்படுத்தியே ஆகவேண்டும் என்பதில் அவ உறுதியாக இருக்கிறா.... அவாவின் நாடான தென்னாபிரிக்கா தமிழர்களுக்கு உதவப் போகிறது என்று தெரிந்துதான் இலங்கையரசு அவசர அவசரமாக தெரிவுக்குழு கதையை எடுத்து அவர்களை மடக்கிவிடப் பார்க்கிறது.... இந்த அமெரிக்க ராணுவத்தினர் சொல்வதை நம்ப வேண்டியதில்லை.... இங்கு நடந்த இன அழிப்பை அரசின் வெற்றியாக அவர்கள் சொன்னால் நாங்கள் விட்டுவிட வேண்டுமா.... பயங்கரவாதத்தை வென்றவர்கள் நல்லிணக்கத்திற்குத் தாங்கள் இறங்கிப்போக வேண்டும் என்றெல்லாம் நினைக்க வேண்டிய அவசியமில்லை என்று அமெரிக்காக்காரன் சொன்னால் ஆச்சா.... சர்வதேசம் அப்படிச் சொல்லப்போவதில்லை.... பொறுத்திருங்கள் குற்றவிசாரணையில் இலங்கை தண்டிக்கப்பட்டே தீரும்...."

இதைக் கேட்டுக்கொண்டே தமிழ் ரோசத்தைக் கைவிடாமல் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதில்தானே நமக்கும் திருப்தி!!

- ஆசிரியர்

# எமது குடியிருக்கும் காணிக்கு காணி உறுதிபெற்றுத்தர வேண்டும்

## அமைச்சரிடம் மகஜர் சமர்ப்பிக்க முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

அராலி ஊரத்தி பிரதேச மக்கள் தமது கடந்த கால இருப்பை உறுதிப்படுத்தி தமக்கு காணி உறுதிகள் வழங்கவேண்டும் எனக் கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதற்கான ஏற்பாட்டை அராலி ஊரத்தி செந்தமிழ் சனசமூக நிலைய நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அராலி ஊரத்தி மக்களாகிய நாம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் காணியில் வாழ்ந்து வருகின்றோம்.

ஆனால் பிரதேச சபை எமது விடயத்தில் அலட்சியமாக உள்ளது. ஆனால் சங்கானை ஜே/180 கிராமத்தில் உள்ள குடியேற்ற மக்களுக்கு காணி பகிர்ந்து வழங்க துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

பிரதேச சபை காணியை பகிர்ந்து வழங்குமாறு முதலில் நாமே கோரியிருந்தோம். ஆனால எம்மை விடுத்து சங்கானை பிரதேச மக்களுக்கு உறுதி வழங்க சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே சங்கானை - அராலி ஆகிய இரு பிரதேச மக்களுக்கும் ஒரே தடவையில் உறுதி வழங்கும் பட்சத்தில் 50 குடும்பங்கள் நன்மை அடையும் எனவே காணி பகிர்ந்து வழங்கும் விடயத்தில் அமைச்சர் தலையிட்டு இரு பிரதேச மக்களுக்கும் ஒரே நாளில் உறுதிகள வழங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று செந்தமிழ் ச.ச.நிலைய மக்கள் திரண்டு அமைச்சரிடம் மகஜர் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்துள்ளனர். (92)

# தவறான பாதையில் அரசு; வழிகாட்ட வேண்டும் சம்பிக்க

## ஐரோப்பாவில் உள்ள இலங்கையர் கோரிக்கை

(கொழும்பு)

வழிதவறிச் செல்ல முயற்சிக்கும் அரசுக்கு சரியான பாதையைக் காட்டுவதற்கு முயற்சி எடுக்கும்படி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் வாழும் இலங்கையர்கள் பலர் மேற்படி கோரிக்கையை அமைச்சர் சம்பிக்கவிடம் விடுத்துள்ளனர்.

அரசாங்கத்தை சரியான பாதையில் நகரச் செய்யுமாறு சம்பிக்கவிடம் இத்தாலி - பிரான்ஸ் வாழ் இலங்கையர்கள் கோரியுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. எழுத்து மூலம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை அதிருப்தி அளிப்பதாக ஐரோப்பிய வாழ் இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் இலங்கைக்கு திரும்புவதற்கு விருப்பமில்லை என குறிப்பிட்டுள்ளனர். அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தல், மக்களின் வாழ்க்கைச் செலவை குறைத்தல் போன்றன குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென கோரியுள்ளனர். அண்மையில் அமைச்சர் சம்பிக்க ஐரோப்பாவிற்கு விஜயம் செய்திருந்த போது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# "சங்கமம்" கலையகத்தின் இரண்டாம் ஆண்டு விழா

சங்கமம் வயலின் வாத்தியக் கலையகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் கலை நிகழ்வுகளும் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் கலைப்பாரம்பரிய வரலாற்றிலே முதன் முறையாக மிகச்சிறு பராயத்தவர்களை உள்வாங்கி அவர்களைச் சிறந்த முறையில் பயிற்றுவித்து வெற்றிகண்டு வரும் சங்கமம் வயலின் வாத்தியக் கலையகம் கடந்த வருடம் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வினை கைலாசபதி கலை அரங்கில் பெருங்கலைஞர்கள், கல்வியியலாளர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்து பலரினது பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# சவால்களை சமாளிக்க சண்டித்தனம் உதவாது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச விசாரணையை நாம் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நிச்சயமாக அது நடக்கும். இந்த விசாரணையின் பிரதிவாதிகளான நாம் கலந்து கொள்ளாமல் விசாரணை நடக்குமானால் அதன் முடிவு மிகவும் பாரதூரமானதாகவே இருக்கும். அத்துடன் பாரிய சவால்களையும் எதிர்நோக்க வேண்டி வரும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரி வித்தார்.

போரை வெற்றி கொள்வதற்கு பலமும் புத்திசாலித்தனமும் தேவைப்பட்டது. ஆனால் தற்போது எழுந்துள்ள சர்வதேச அழுத்தங்களையும் சவால்களையும் வெற்றி கொள்ள புத்திசாலித்தனமே தேவை. மாறாக சண்டித்தனத்தாலோ வாய்ச்சவடால்களாலோ சர்வதேச அழுத்தங்களை வெற்றி கொள்ள முடியாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொர்பில் அவர் மேலும் கூறியதாவது,

சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கோரி வந்த தமிழ் தரப்பினர் போர் முடிவடைந்ததும் முதற்தடவையாக ஐக்கிய இலங்கைக்குள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்துக்கு இணங்கினார்கள். ஆனால் அரசாங்கம் அதனைக் கருத்தில் கொள்ளாமல் காலதாமதமாக்கியதால் அவர்கள் மீண்டும் தமது பயணத்தை மாற்றியுள்ளனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் எமது அரசியல் தலைவர்கள் கைநழுவவிட்டனர். சிலர் அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்போது நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

போர் முடிந்தவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் உரிய முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றினை முன்வைத்திருக்கலாம். அவ்வாறு செய்திருந் தால் இன்று இவ்வாறான பாரிய சர்வதேச அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

ஆனால் இன்று சர்வதேச விசாரணைவரை சென்றுள்ளது. இன்று சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ள மாட்டோம். இலங்கைக்குள் எந்தவொரு விசாரணைக் குழுவையும் அனுமதிக்க மாட்டோம் என்றெல்லாம் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. இது மிகவும் முட்டாள்தனமான வாதமாகும் என்றும் தெரிவித்தார்.

# புலிகள் இயக்கம் ஏன் தோற்கடிக்கப்பட்டது?







எல்.ரீ.ரீ.ஈ யின் தோல்விக்கு பல காரணங்கள் கூறப்படுவது இயற்கையே, ஆனால் அதில் எதுவும் குறிப்பிடத்தக்க வகையில் பிரத்தியேகமான உண்மை கிடையாது, அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டதாகவும் ஒன்றைவிட மற்றது முக்கியமானதாகவும் உள்ளது.

பெரும்பாலும் தெற்கிலிருந்து அடிக்கடி அறிவிக்கப்படுவது, உறுதிமிக்க ஒரு தலைமை (நிதி, சளைக்காத அரசியல் ஆதரவு, இராணுவ மூலோபாயம், மற்றும் வெளிநாட்டு அழுத்தங்களை எதிர்த்தல்) பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வரலாம் என்பதாக. ஆனால் இதன் ஒரு பகுதி மட்டுமே உண்மை.

தமிழ் தாராண்மை வாதிகளிடத்தில் பிரபலமான ஒரு இரண்டாவது வாதம், சிங்கள பொதுமக்கள் மற்றும் தமிழ் தலைவர்களுக்கு எதிராக எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதத்தை கைக்கொண்டதால், எல்.ரீ.ரீ.ஈ அதன் தார்மீக உயர் அடித்தளத்தை இழந்துவிட்டது, மற்றும் உள்ளக ரீதியாக அது ஒருவரை ஒருவர் அழிக்கும் தன்னினத்தையே தின்னும் படுகுழியில் அமிழ்ந்தது என்பதாகும்.

சாய்வு நாற்காலியில் அமர்ந்துள்ள வரலாற்றாசிரியர்களால் நேசிக்கப்படும் மூன்றாவது கோட்பாடு, 75 விகிதமான சிங்களவர்களுக்கு எதிரான 13 விகிதமான தமிழர்கள் நடத்தும் போர் அதுவும் அரசாங்கம் அல்லாத ஒன்று அதிகாரமுள்ள அரசாங்கத்துடன் நடத்தும் போர் இயல்பாகவே வெற்றி கொள்ள முடியாத ஒன்று.

புலிகள் மீது பச்சாத்தாபம் கொண்ட தமிழர்களால் முன்வைக்கப்படும் நான்காவது விளக்கம், இந்தியா மற்றும் சர்வதேச சமூகம் என்பன எல்.ரீ.ரீ.ஈ யை கைவிட்டு விட்டன என்பது. 'அமெரிக்கா மற்றும் இந்தியா என்பன கொழும்புக்கு இராணுவ புலனாய்வு உதவிகளைக் கூட வழங்கின என்று அவர்கள் புலம்புகிறார்கள்.

இறுதியாக ஐந்தாவதாக ஒரு கருத்து கூறப்படுகிறது, அதில் நான் அதிக கவனத்தை செலுத்த விரும்புகிறேன், அது அரசியல் ரீதியாக எல்.ரீ.ரீ.ஈ செய்த பெருந்தவறு, ஏனைய அனைத்து எதிர்மறையான விளைவுகளும் இந்த பிறவி நோயின் செயலிழப்பினாலேயே ஏற்பட்டது.

**தலைமையின் தீர்மானம்:** ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய மற்றும் இராணுவ தளபதி சரத்பொன் சேகா ஆகியோருக்கு பாராட்டுகள் வழங்கப்பட வேண்டும், (இந்த மூவரில் ஒருவரை நீங்கள் விரும்பா விட்டாலும்கூட அவரது தகுதியை உங்களால் மறுக்க முடியாது). எல்.ரீ.ரீ.ஈ.யினை ஒழித்துக்கட்ட அவர்கள் தீர்மானித்ததை மறுக்க முடியாது.

**1989இல் அமிர்தலிங்கம், 1993இல் அத்துலத்முதலி, 1993இல் பிரேமதாஸ, 1994இல் காமினி திசாநாயக்கா, 1999இல் நீலன் திருச்செல்வம் போன்றவை அவற்றில் சில. நவ சமசமாஜ கட்சியின் அண்ணாமலைகூட எல். ரீ.ரீ.ஈ யினால் கொல்லப்பட்டார். பகுத்தறிவு இழந்து வருவதற்கு சான்றாக செப்ரெம்பர் 11க்கு பின்னரும் உலகம் மாறிவிட்டது என்பதை அறியாமல் தனது செயல்களை புலிகள் விடாப்பிடியாகத் தொடர்ந்தார்கள். தனக்கான சவக் குழியை அது தானே வெட்டிக் கொண்டது.**

## குமார் டேவிட் கட்டுரையிலிருந்து

சிங்கள அரசாங்கம் தமிழ் பொதுமக்களை சர்வதேச ரீதியாக கொல்லவில்லை மாறாக அது உணர்ச்சிபூர்வமாக கொன்றது. புலிகள் தங்கள் மத்தியில் கவசமாக பயன்படுத்திய பொதுமக்களை அழிப்பதற்கு அது தயங்கவில்லை. 1989 - 90 களில் இராணுவம் தென் பகுதி இளைஞர்களின் இரத்தத்தை உறிஞ்சியதுடன் ஒப்பிடுகையில் இது ஆச்சரியம் எதுவும் தரவில்லை.

இதை ஒரு பக்கமாக ஒதுக்கி விட்டு கருத்துச் சொன்னால், ஐ.நா. மனித உரிமைகள் சபை மனித நேயத்துக்கு எதிராகவும் மற்றும் யுத்தக் குற்றங்கள் மற்றும் இன அழிப்பு என்பனவற்றுக்கு எதிராகவும் நடத்தப்பட்ட குற்றங்களுக்காக மேற்கொள்ளப்படும் விசாரணைகள், ஒரு இனத்தை அல்லது சாதியை அழிக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு என்பதை நிரூபிக்கப்படவேண்டும் என்பதால் அது உறுதியானதாக இல்லை.

எல்.ரீ.ரீ.ஈ தோற்றதுக்காக எனது பட்டியலில் உள்ள இரண்டாவது கோட்பாடு என்னவென்றால் அது பயங்கரவாதத்தால் சீரழிந்து அதன் உயர் தார்மிக அடித்தளத்தை இழந்து விட்டது என்பதுதான். மூன்றாவது ஆய்வு தமிழீழம் என்பது ஒரு மாயை அதை ஒருபோதும் அடைந்திருக்க முடியாது. இவை இரண்டிலும் சில உண்மைகள் உள்ளன.

அரசாங்கம் பொதுமக்களை கொலை செய்து கற்பழித்து, தீ வைத்து இன வெறுப்பை ஏற்படுத்தியபோது முதலில் தமிழ் போராளிகள் (எல்.ரீ.ரீ.ஈ. மட்டுமல்ல) அதற்கு வஞ்சம் தீர்ப்பதற்காக இதே வழியை கையிலெடுப்பதற்கு அது உதாரணமாக இருந்தது என்பது உண்மை. ஆனால் இதே வழியில் எல்.ரீ.ரீ.ஈ ஏனைய தமிழ் போராளிகளை நர வேட்டையாடியபோது விடயங்கள் மாற்றம் பெற்றது.

1987இல் ஹபரண மற்றும் புறக்கோட்டை பேருந்து நிலையங்கள் என்பனவற்றில் நடந்த குண்டு வெடிப்பில் பயங்கரவாதம் பெரிய அளவில் வெளிப்பட்டது, இந்த ஒவ்வொரு நிகழ்விலும் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அதைத்தொடர்ந்து 1990 இல் சிறைப்பிடிக்கப்பட்ட 600 காவல்துறையினர் துடிக்கத் துடிக்க படுகொலை செய்யப்பட்டார்கள். பொதுமக்களுக்கு எதிரான பயங்கரவாதம் மூலம் எல்.ரீ.ரீ.ஈ விடுதலைப் போரை பின்னியிருப்பதை இது சுட்டிக் காட்டியது. வெவ்வேறு வகையான கொடூரமான செய்கைகளுக்கு உதாரணமாக 1991இல் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சி உள்ளது.

இந்த அட்டூழியங்களுடன் அரசியல் கொலைகளும் சேர்ந்துள்ளன. 1989இல் அமிர்தலிங்கம், 1993இல் அத்துலத்முதலி, 1993 இல் பிரேமதாஸ, 1994 இல் காமினி திசாநாயக்கா, 1999இல் நீலன் திருச்செல்வம் போன்றவை அவற்றில் சில. நவ சமசமாஜ கட்சியின் அண்ணாமலைகூட எல்.ரீ.ரீ.ஈயினால் கொல்லப்பட்டார். பகுத்தறிவு இழந்து வருவதற்கு சான்றாக செப்ரெம்பர் 11க்கு பின்னரும் உலகம் மாறிவிட்டது என்பதை அறியாமல் தமது செயல்களை புலிகள் விடாப்பிடியாக தொடர்ந்தார்கள். தனக்கான சவக் குழியை அது தானே வெட்டிக் கொண்டது.

2006, 2007, மற்றும் 2008 ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் பொதுமக்களுக்கு எதிராக கிட்டத்தட்ட 15 தாக்குதல்கள் நடத்தப்பட்டன இவற்றில் ஒன்றைக்கூட இராணுவ எதிரிக்காக நடத்தப்பட்ட போர் என்று சொல்லிவிட முடியாது. அது தற்பெருமைக் கோளாறின் அளவுகோல், செப்டெம்பர் 11க்குப் பிறகுகூட யதார்த்தத்தை விட்டு விலகி பிரபாகரன் தனிப்பட்ட பயங்கரவாதத்தை தொடர்ந்தார், 2005இல் லக்ஸ்மன் கதிர்காமர், 2008இல் ஜானக பெரேரா, 2008இல் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே மற்றும் நீங்கள் நம்புவதைப் பொறுத்து டசின் கணக்கான மற்றவர்களும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதத்தை பயன்படுத்தியது. எல்லா இடங்களிலுமுள்ள மக்களுக்குத் தெரியும். அரசாங்கப்படையினர் ஒரு அருவருப்பான உரிமைகள் மீறலாளரும் மற்றும் அடக்குமுறையாளரும் ஆவார்கள், ஆனால் விடுதலையாளர்கள் வித்தியாசமாக நடக்க கடமைப்பட்டவர்கள்.

எல்.ரீ.ரீ.ஈயின் தார்மீக உயர் பங்கு இழந்து போவதற்கான மற்றொரு காரணி வடக்கு கிழக்கு மக்கள் அது இளைஞர்களை கடத்துகிறது என்கிற அச்சம் அடைந்ததுதான். இன்று வெளிநாட்டில் வாழும் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களில் அநேகமானவர்கள் எல்.ரீ.ரீ.ஈக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகிறார்கள் ஆனால் முரண்பாடாக

**எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதத்தை பயன்படுத்தியது. எல்லா இடங்களிலுமுள்ள மக்களுக்குத் தெரியும். அரசாங்கப்படையினர் ஒரு அருவருப்பான உரிமைகள் மீறலாளரும் மற்றும் அடக்குமுறையாளரும் ஆவார்கள், ஆனால் விடுதலையாளர்கள் வித்தியாசமாக நடக்க கடமைப்பட்டவர்கள்.**

இந்த கட்டாய ஆட்சேர்ப்பிலிருந்து அகதிகளாக வெளியேறியவர்கள்தான் இவர்கள்.

இவை அனைத்தும் உண்மை, ஆனால் பயங்கரவர்தம் மற்றும் தார்மீக உயர் அடிப்படையை இழந்தது என்பவைகள்தான். தோல்விக்கான நேரடிக் காரணங்கள் அல்ல. அவர்களின் விடயத்தில் மக்களின் நம்பிக்கை மற்றும் சர்வதேசத்தின் ஆதரவு என்பன நிலையாக இருந்திருந்தால் அந்த இரக்கமற்ற கொடிய அமைப்பு வெற்றி பெற்றிருக்கும்.

இது தொடர்பாக நினைவுக்குவரும் ஒரு தெளிவான விடயம் இஸ்ரேலின் உருவாக்கம்தான். யதார்த்த உலகத்தில் அரசியலில் நல்லவைகள் ஒருபோதும் வெற்றியடைவதில்லை. சிலவேளைகளில் பயங்கரவாதத்தை பயன்படுத்தும் இயக்கங்கள் வெற்றிபெறுகின்றன.

இந்த ஆய்வில் எல்.ரீ.ரீ.ஈ. ஏன் தோற்கடிக்கப்பட்டது என்பதற்கான காரணிகளை முன்னுரிமைப்படுத்த முயன்று வருகிறேன். ஆனால் இந்தக் கட்டுரை சர்ச்சைக்குரிய ஒன்றாக இருக்கும் என்பதையும் நானறிவேன் - ஆனால் உண்மை வெல்லட்டும்.

நான் மிகவும் முக்கியமானவை என நம்பும் இரண்டு விடயங்களின் பக்கம் திரும்புகிறேன். அதில் இரண்டாவது நிலையில் உள்ளதாக நான் வரிசைப்படுத்தியுள்ளது சர்வதேச சமூகத்தின் எதிர்ப்புகளை.

மற்றும் நான் முதலாவதாக விருது கொடுக்க இருப்பது, எல்.ரீ.ரீ.ஈயின் உயிரணுக்களில் உள்ள பிறப்பு குறைபாடுகளுக்கே.

என்னுடைய மனதில் சர்வதேசகாரணி மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இந்த ஆய்வினை உக்ரேனில் திரும்பவும் நடந்த நிகழ்வுகள் நிரூபித்துள்ளன, அயலில் உள்ள பெரிய சக்தி எப்படி நடக்கவேண்டும் என்பதை முடிவு செய்கிறது. கிரிமியா நிரந்தரமாகப் போய்விட்டது. கிழக்கு உக்ரேனின் தலை விதியை ரஷயா தீர்மானிக்க உள்ளது, ஒபாமா, ஏஞ்சல் மேர்க்கல், மற்றும் நேட்டோ என்பன தங்கள் மனசை திறந்து அசுத்தத்தை வெளியேற்ற முடியும் ஆனால் அதில் பிரச்சினை இல்லை. இலங்கையில் அது அத்தனை இலகுவானதல்ல.

(18ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தப் பாதிப்புக்கு நிவாரணம் வேண்டும் இல்லையேல் நல்லிணக்கம் மலராது

## மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்காமல் இலங்கையில் நிலையான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்று ஜெனிவாவுக்கான முன்னாள் அமெரிக்கப் பிரதிநிதி எலின்டொனவோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் அமெரிக்கா எதனையும் சம்பாதிக்கவில்லை எனவும் எலின் டொனவோ தெரிவித்துள்ளார்.

மனித உரிமை கண்காணிப்பகத்தின் சர்வதேச விவகாரப் பணிப்பாளராக தற்போது எலின் கடமையாற்றி வருகின்றார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பகமான உள்ளக விசாரணைகளை நடாத்த இலங்கை அரசாங்கம் முனைப்பு காட்டத் தவறியதன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற நேரிட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்படாது, குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாது நிலையான சமாதானத்தையோ நல்லிணக்கத்தையோ நாட்டில் எதிர்பார்க்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார். குற்றச்செயல்




களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமையை கட்டுப்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகள் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.. சர்வதேச ரீதியான விசாரணைகள நாட்டுக்கு நன்மையையே ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அகற்றப்படுவது மிக அவசியம்

## மாதுலுவே சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)



நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறமை அகற்றப்பட வேண்டும் என்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் உத்தேசங்கள் எதுவும் தமக்குக் கிடையாது என கோட்டே ஸ்ரீ நாக விகாரையின் பீடாதிபதி மாதுலுவே சோபித்ததேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சகல இனங்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என சுட்டிக்காட்டியுள்ள அவர், மதப் பயங்கரவாத நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் தெளிவுறுத்து கின்றார்.

எது எவ்வாறாயினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் பேச்சுவார்த்தைகளில் தான் பங்களிப்பு வழங்கி வருவதாகவும், தற்போதைய முறைமைகளில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.


# இலங்கையில் எண்ணெய் அகழ்வு களம் குதிக்கிறது பிரான்ஸ் நிறுவனம்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் எண்ணை அகழ்வுப் பணியில் ஈடுபடுவதற்கு பிரான்ஸ் நாட்டு நிறுவனம் ஒன்றுக்கு அனுமதியளிக்கப்படவிருக்கிறது.

இலங்கையில் பெற்றோலிய அகழ்வுப்பணிகளில் ஈடுபட பிரான்ஸின் சர்வதேச எண்ணெய் நிறுவனம் ஒன்று ஏற்கனவே முன்வந்துள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கடற்பகுதியில் இந்தப் பணிகள் இடம்பெறுவதற்கான உடன்படிக்கை செய்து கொள்ளப்படவுள்ளது. உலகின் 6 பாரிய எண்ணெய் நிறுவனங்களில் பிரான்ஸின் சர்வதேச எண்ணெய் நிறுவனமும் உள்ளடங்குகிறது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் நிபந்தனைகளுக்கு அந்த நிறுவனம் இணக்கம் வெளியிட்டுள்ளது.



# 137 முன்னாள் போராளிகளை சமூகத்துடன் மீளிணைக்க ஏற்பாடு



இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 12303 முன்னாள் புலி உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்தனர் அல்லது கைது செய்யப்பட்டனர் என புனர்வாழ்வு திணைக்கள ஆணையாளர் மேஜர் ஜெனரல் கே.ஜே. விஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இன்னமும் சொற்ப அளவிலான முன்னாள் புலிப் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். 133 முன்னாள் ஆண் புலிப் போராளிகளுக்கும் 4 முன்னாள் பெண் போராளிகளுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

131 முன்னாள் ஆண் போராளிகளுக்கும் 4 முன்னாள் பெண் போராளிகளுக்கும் வவுனியா முகாமில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும், இரண்டு ஆண் புலிபோராளிகளுக்கு சேனபுர முகாமில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இவர்கள் அனைவரும் விரைவில் சமூகத்துடன் மீள இணைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# குருநாகல் கான்ஸ்டபிள் கொலை; பிரதான சந்தேகநபர் சுட்டுக்கொலை

குருநாகல், கெட்டுவான சந்தியில் வைத்து போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிளை கடத்தி கொலைசெய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேகநபரை கண்டி, தெல்தெனிய பகுதியில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்நிலையில் சந்தேகநபர் மறைத்து வைத்திருக்கின்ற ஆயுதத்தை மீட்பதற்காக பொலிஸார் அவரை உடுதும்பரைக்கு அழைத்துச் சென்றவேளை அவர், பொலிஸாரிடமிருந்து ஆயுதத்தை அபகரிப்பதற்கு முயன்றுள்ளார். இதன் போதே பொலிஸார் அச்சந்தேகநபரை சுட்டுக்கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டி பின்வாங்குகிறார் பொன்சேகா



(கொழும்பு)

தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது அபேட்சகராக போட்டியிடுவது குறித்து இதுவரை முடிவுசெய்யவில்லை என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குறிப்பிடுகிறார்.

"நான் பொது அபேட்சகராக போட்டியிடுவதாக செய்திகள் வெளிவந்தாலும், அவ்வாறான ஒரு முடிவுக்கு இதுவரை நான் வரவில்லை. அந்தச் செய்தி எவ்வித உண்மையும் ஆராய்ந்து பாராமல் வெளிவந்தவை என்பதும் அது பொதுமக்களை வேண்டுமென்றே திசைதிருப்பச் செய்துள்ளவை என்பதும் குறிப்பிட்டாக வேண்டும்"

எனது கட்சியின் கொள்கைகளுடன் ஒத்துவருகின்ற ஒரு அபேட்சகர் பொது அபேட்சகராக போட்டியிட வருவதாயின், அதற்கு ஒத்துழைப்பு நல்க நானும் எனது கட்சி உறுப்பினர்களும் விரும்புவதாயினும் இதுவரை அவ்வாறானதொரு பொது அபேட்சகர் இல்லை. அவ்வாறு முன்வரவுள்ளவர்கள் யார் என்பது பற்றியும் எங்களுக்குத் தெரியாது.

பொது அபேட்சகராகத் தெரிவு செய்யப்படுபவர் அரசியலுடன் தொடர்புபட்டவராக இருந்தாலும் அவ்வாறு அரசியலுடன் தொடர்புபடாதவராக இருந்தாலும் நான் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டேன். அதேபோல அரசாங்கமும் முன்வருகின்ற ஜனாதிபதி அபேட்சகரைத் தெரிவு செய்து கொள்ளும்" எனவும் அவர் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைத்துள்ளார்.

# சுகாதார கல்விப்பீட மாணவர்கள் மீது சிறைச்சாலையில் தாக்குதல்

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இணைந்த சுகாதார கல்வி பீட மாணவர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தால், அது தொடர்பில் உரிய அமைப்புகளிடம் முறையிட முடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹன தெரிவித்துள்ளார்.

பொலிஸார் தங்களின் அதிகாரங்களை நீதியான முறையில் கையாளவில்லை என்றால், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இணைந்த சுகாதார கல்விப் பீட மாணவர்கள் காயங்களுக்குள்ளான நிலையில் நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பொலிஸார் அவர்கள் மீது தாக்குதல் நடாத்தியதாக அனைத்திலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளதுஇந்த நிலையிலேயே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

# அடையாள அட்டை மோசடி தெற்கில் அதிகம் தலையெடுப்பு

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையை வழங்கி கையடக்கத் தொலைபேசிக்கான இணைப்பினைப் பெறும்போது அவ்விபரங்களையும் முகவரியையும் திருடி வேறு படங்களை இணைத்து போலி அடையாள அட்டைகளை உருவாக்கி குற்றவாளிகள் வெவ்வேறு குற்றச் செயல்களைப் புரிந்து வருவதாக தென்பகுதி தகவல்கள் கிடைத்துள்ளன.

அவ்வாறு போலியாக உருவாக்கப்பட்ட அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி குற்றச் செயல்களைச் செய்துவிட்டு குற்றவாளிகளை அவ்விடத்திலேயே விட்டுச் செல்கின்றனர். அதனால் அடையாள அட்டைக்குச் சொந்தக்காரங்கள் பெரும்பாலும் பொலிஸாரால் கைது செய்யப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

நீதிமன்றில் நிறுத்தப்படுவதற்கும் வாய்ப்புள்ளது என பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

அதனால் தொலை பேசிக்கான இணைப்புக்களை கொள்வனவு செய்யும்போது, மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றனர்.

## ஊடகவியலாளர் விபரக்கொத்து வெளிவரவிருக்கிறது

பதுளை மாவட்ட ஊடகவியலாளர்களின் விபரக் கைநூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி பதுளை மாவட்ட அரச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மாகாண சபை அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், சமூகவியலாளர்கள் ஊடகவியலாளர்கள் அரச திணைக்கள முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பதுளை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். (10)

# நவீன தொடர்பாடல் சாதனங்கள் மக்களை ஆக்கிரமித்துள்ளன

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

தொலைக்காட்சி போன்ற நவீன தொடர்பாடல் சாதனங்கள் மக்களை ஆக்கிரமித்துள்ள இக்காலச் சூழ்நிலையில் இங்கு நடைபெறும் இயல், இசை, நாடக விழாவிற்குப் பெருந் தொகையான மக்கள் வருகை தந்திருப்பது யாழ்ப்பாணத்தில் கலைகள் வளரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.க. கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி நடாத்தி வரும் இயல், இசை, நாடக விழா மூன்றாம் நாள் நிகழ்வுகளில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செந்தமிழ்ச் சொல்லருவி, ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அதிபர் கணபதிப்பிள்ளை மேலும் தெரிவித்ததாவது,



எங்கள் கலை, கலாசாரம் என்பன பாரம்பரியமானவை, பழந்தமிழர் பண்பாட்டைப் பறைசாற்றுபவை. எமது இனம் மொழி, பண்பாட்டுப் பெருமைகளை எடுத்துச் சொல்லும் பாரம்பரிய கலைமரபுகள் பேணப்பட வேணடும். அவை நவீன உத்திகளோடு இன்றைய இளைய தலைமுறையினரிடையே எடுத்து வரப்படவேண்டும். இதனை இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினர் செய்து வருவது பாராட்டுக்குரியதாகும் என்றார்.

இந்த மண்ணில் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கும் தனிநபர் முயற்சியாக இந்த கலைக்கல்லூரியினரின் செயற்பாடுகள் ஏனைய கலைசார்ந்த அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளது.

நவீன தொலைக்காட்சி போன்ற தொடர்பு சாதனங்கள் மக்களைக் கட்டிப்போட்டுள்ள இன்றைய காலச்சூழலில் நாட்டில் பல்வேறு விழாக்களும் கொண்டாட்டங்களும் நடைபெறுகின்ற நேரத்தில் இங்கு பெருந்தொகை மக்கள் வருகை தந்திருப்பது யாழ்ப்பாணத்தில் கலைகள் வளரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

இக்கலைகளை வளர்ப்பதற்கு பாரம்பரியக் கலைஞர்களும் இளையதலைமுறையினரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தவநாதன் றொபேட் அவர்களின் குரலிசை, பரதகலாகேந்திர மாணவர்களின் நர்ட்டியாஞ்சலி, லி.அனிருத்திரனின் மாணவர்கள் வழங்கிய கிண்கிணிநாதம், கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினரின் 'மயானகாண்டம்' இசை நாடகம் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (10)

# வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிமுடிவுகள்

(நேற்றையதொடர்ச்சி...)

(வடமராட்சி)

வடமராட்சி வலய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

**பிரிவு V கட்டுரை வரைதல்,**

ஆ.அனுசினி (யா/வடமத்திய மகளிர் கல்லூரி), கு.சரண்யா (யா/ஞானாசாரியர் கல்லூரி), சி.கோமகள் (யா/புற்றளை ம.வி).

**பாவோதல்,**

வி.றேணுகா (யா/வடமத்திய மகளிர் கல்லூரி), ரா.சங்கீதா (யா/தும்பளை சிவப்பிரகாச வித்தி), ரா.அஜந்திகா (யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி).

**இலக்கணப்போட்டி,**

இ.சத்தியா (யா/வடஇந்து மகளிர் கல்லூரி), கி.குணராஜ் (யா/ஹாட்லிக் கல்லூரி), இ.யூடின் திவ்யா (யா/வட மத்திய மகளிர் கல்லூரி).

**திறனாய்வுப்போட்டி,**

சி.சதீஸ்மனா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை), சீ.யசிந்தா (யா/ஞானாசாரியர் கல்லூரி), பி.பிருந்திகா (யா/விக்கேஸ்வராக் கல்லூரி).

**குறுநாடக ஆக்கம்,**

நி.மேரிகொன்சி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சே.கிருத்திகா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), சி.சிவரஞ்சினி (யா/வட இந்து மகளிர் கல்லூரி).

**கவிதை ஆக்கம்,**

தே.பவிசாயினி (யா/நெலல்லியடி மத்தி கல்லூரி), இ.பிரதீபா (யா/வல்வை மகளிர் ம.வி), ந.நிலோசினி (யா/ஞானாசாரியர் கல்லூரி).

**சிறுகதை ஆக்கம்,**

மு.பாவலன் (யா/ஹாட்லிக் கல்லூரி), து.துஷ்சந்தினி (யா/அம்பன் அ.மி.த.க.பா), சு.துஷாந்தி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

**பேச்சுப்போட்டி,**

பா.பாலாஜினி (யா/வடமத்திய மகளிர் கல்லூரி), செ.நிமலன் (யா/நெல்லியடி மத்திய கல்லூரி), ந.கௌதமி (யா/சிதமபராக் கல்லூரி).


**இசை - தனி,**

வெ.சிந்துஜன் (யா/நெல்லியடி மத்திய கல்லூரி), தே.ஐஸ்வரியா (யா/வடஇந்து மகளிர் கல்லூரி), க.சங்குலக்சுமி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**நடனம் - தனி,**

சி.அபிநயா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), த.சாளினி (யா/தொண்டைமானாறு வீ.வித்தி), மெ.ஆரணியா (யா/வடஇந்து மகளிர் கல்லூரி).


(தொடரும்...)



**சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் சுருதி 07 வெளியீட்டு விழா சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோவில் மண்டபத்தில் கடந்த புதன்கிழமை கழகத் தலைவர் ஸ்ரீ.ஸ்ரீரங்கநாயகி தலைமையில் நடைபெற்றபோது...**

(48)

# "சிவபூமி" முதியோர் இல்லத்தில் மார்க்கண்டு மண்டபம் திறப்புவிழா



(யாழ்ப்பாணம்)

வைத்திய கலாநிதி அமரர் செல்வி யமுனா மார்கண்டுவின் ஞாபகார்த்தமாக சுழிபுரம் சிவபூமி மூதியோர் இல்லத்தில் பெற்றோர்களால் அமைக்கப்பட்ட வைத்திய நிபுணர் அமரர் செல்வி மார்க்கண்டு நினைவு மண்டபம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளைத்தலைவரும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கட்டடத்தினை அமரர் செல்வி யமுனாவின் பெற்றோர் தி.மார்க்கண்டு சிவபாக்கியம் தம்பதியினர் திறந்து வைத்ததுடன் திரைக் கல்லையும் திரை நீக்கம் செய்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வடமாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் வலி.மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் ஆகியோரும் ஆசியுரையினை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானப் பிரதம குரு நகுலேஸ்வரக்குருக்கள் ஆகியோர் வழங்கினார்கள்.(63)

# முரசின் இன்றைய பலன்



(19.05.2014 திங்கட்கிழமை)

ஐய வருஷம் வைகாசி மாதம் 5 ஆம் திகதி.
மரணயோகம் / பஞ்சமி.
உத்தராட நட்சத்திரம் பி.இ. 01.10 வரை. பின் திருவோணம்.
இராகு காலம 08.52 - 05.53 வரை. சுபநேரம 11.52 - 01.22 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சக ஊழியர்களை உற்சாகப்படுத்தி தேங்கிய பணியினை வெற்றிகரமாக முடித்தல், இரகசியத்தைக் கசிய விடாது தேங்கி வைத்திருந்ததால் பிரச்சினை அற்றுப் போதல். |
| ரிஷபம் | ஆபத்தில் உதவி செய்தபடியினால் பாராட்டும் நன்றிப் பெருக்கும் அடைதல், மருத்துவத்திற்காக கடன்படும் நிலையில் தக்க வைக்கப்படல். |
| மிதுனம் | சட்டவிரோதமான செயலைக் கைவிட்டால் பதகளிக்கு நீங்கி விடல், முரண்பட்டிருந்த உறவினரை மன்னித்து உறவு கொண்டாடமுன்வரல். |
| கடகம் | கருத்து முரண்பாடுகள் விலகி தம்பதியர் மத்தியில் சந்தோஷம் ஏற்படல், வாடிக்கையாளர்களை புதிய யுக்தியை மேற்கொள்ள முயலல். |
| சிம்மம் | விட்டுக்கொடுத்து நடப்பதினால் குழப்பநிலை அற்றுப் போதல், தெய்வதலங்களுக்கு குடும்பத்தவருடன் விஜயஞ் செய்து நிம்மதி பெறுதல். |
| கன்னி | நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பதவியுயர்வு கிட்டியதால் புளகாங்கிதமடைதல், திட்ட மிட்டதினால் பணியின் இலக்கு துரிதமாக முடிவ்வடைதல். |
| துலாம் | மனைவியின் தேகநலத்தில் கவனமெடுத்ததால் துயர்விலகிப்போதல், குறுக்குவழியில் மேற்கொள்ளமுயலும் செயலால் வில்லங்கம் ஏற்படல். |
| விருச்சிகம் | கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படாது சுமுகமாக நடந்து கொள்ளுங்கள், ஒப்படைத்த பணியினைச்சுணக்குவதால் புதிய முகத்தை நாடிச்செல்லல். |
| தனுசு | விவாகத்திற்கு தடையாக இருக்கும் தோஷங்களுக்குரிய பரிகாரம் செய்யமுற்படல், கையடக்கத் தொலைபேசி மூலம் ஏற்படும் அநாமதேய தொடர்புகளில் எச்சரிக்கையாக இருங்கள். |
| மகரம் | சரியான முடிவினை செயற்படுத்த பிழையான வழியை நாடுவதைக்கைவிடல், நண்பருடன் ஏற்பட்ட சந்தேகக்கோடு சந்தோஷக்கோட்டினைக்கொண்டு வருதல். |
| கும்பம் | புறம்பேசித்திரியும் நபர்களிடமிருந்து புத்தி சாலித்தனமாக விலகிவிடல், கொண்டு செல்லும் பொருட்களில் போதிய கவனமெடுத்தல் அவசியம். |
| மீனம் | புத்திமதிகளை அலட்சியம் செய்து நடக்கத் தலைப்படும் பிள்ளைகளை எண்ணி மனம்வருந்துதல், நிலுவையைப் பெற காவல்துறை சென்று முறையிட முஸ்தீபு. |

## INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

ராஜஸ்தான் எதிர் மும்பை

இடம்:அஹமதாபாத். நேரம்: மாலை 4மணி

டில்லி எதிர் பஞ்சாப்


இடம்: டில்லி. நேரம்: இரவு 8 மணி

# இறுதியில் பலப்பரீட்சை



ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு உள்ளூர் வீராங்கனை சாரா எர்ரானி மற்றும் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் மோதவுள்ளனர்.இத்தாலியில் நடைபெற்று வரும் ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியின் சேர்பியாவின் ஜெலினா ஜன்கோவிச்சுடன் நேற்று முன்தினம் மோதிய இத்தாலி வீராங்கனை எர்ரானி 6-3 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் ஜன்கோவிச் சற்றுப்போராடினாலும், அவரது சேர்வீஸ் ஆட்டத்தை முறியடித்து புள்ளிகளைக் குவித்த எர்ரானி 6-3, 7-5 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதன்மூலம் சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் இத்தாலி ஓப்பன் இறுதிப் போட்டிக்கு உள்ளூர் வீராங்கனை ஒருவர் தகுதி பெற்றுள்ளார். இதற்கு முன்பு 1985இல் டாரண்டோவில் நடைபெற்ற போட்டியில் ரபேலா ரெகி பட்டம் வென்றார்.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியின் முதல் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் சேர்பியாவின் அனா இவானோவிச் ஆகியோர் பலப்பரீட்சை நடாத்தினர். இதில் செரீனா வில்லியம்ஸ் 6-1, 3-6, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் முதல் நிலை வீரர் நடால் மற்றும் சேர்பியாவின் ஜோகோவிச் மோதவுள்ளனர்.



# டேவிட் வோர்னர் விலகல்

(ஹைதராபாத்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி ஆகஸ்ட் மாதம் சிம்பாப்வேயில் சுற்று பயணம் செய்து அந்த நாட்டு அணியுடன் ஒருநாள் போட்டி தொடரில் விளையாடவுள்ளது. இந்த தொடரில் இருந்து அவுஸ்ரேலியாவின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் விலகியுள்ளார்.

வோர்னரின் மனைவி கர்ப்பிணியாகவுள்ளார். அவருக்கு ஆகஸ்ட் மாதத்தில் குழந்தை பிறக்க போகிறது. இதனால் மனைவியை அருகில் இருந்து கவனித்து கொள்ளுவதற்காக சிம்பாப்வே தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார்.

## கிண்ணம் வென்றது அத்தெல்டிக்



ஸ்பெனிஷ் பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் அத்தெல்டிக் மட்ரிட் அணி சம்பியன் பட்டத்தைப் கைப்பற்றிக்கொண்டது. பார்சில்னோ அணியுடன் நடைபெற்ற போட்டியில் 1-1 என்ற சமநிலையான முடிவைப் பெற்றதன் மூலம் முதலிடத்தைப் பெற்று 18 வருடங்களின் பின்னர் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்கள்.

ஸ்பெயின் நாட்டின் மிகப்பலமான பார்சிலோனோ, ரியல் மட்ரிட் கழகங்களை வீழ்த்தி வெற்றி பெறுவது என்பது மிகக்கடினமான ஒன்று. இருப்பினும் இந்த வருட தொடரில் தமது சிறப்பான போராட்டத்தை வெளிக்காட்டி வெற்றி பெற்றுள்ளது அத்தெல்டிக் மட்ரிட் அணி.

இந்த வருடம் விளையாடிய 38 போட்டிகளில் அத்தெல்டிக் மட்ரிட் அணி 28 வெற்றிகளையும், 6 சமநிலையைப் பெற்றுள்ளதோடு, 4 தோல்விகளையும் சந்தித்து 90 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது. இரண்டாமிடத்தைப் பெற்றுள்ள பார்சிலோனா அணி 38 போட்டிகளில் 27 வெற்றிகளையும், 6 சமனிலை முடிவுகளையும், 5 தோல்விகளையும் சந்தித்து 87 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

38 போட்டிகளில் விளையாடிய ரியல் மட்ரிட் அணி 27 வெற்றிகளையும், 6 சமனிலையும், 5 தோல்விகளையும் சந்தித்து 87 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இருப்பினும் கோல் வித்தியாசத்தில் பூர்சில்னோ அணி இரண்டாமிடத்தைப் பெற்றது. அத்தெல்டிக் க்ளப், செவியா அணிகள் முறையே நான்காம், ஐந்தாமிடங்களைப் பெற்றுள்ளன.

## காதலியை மாற்றிய கலிஸ்



தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் கலிஸ், நான்காவது முறையாக, தனது காதலியை மாற்றியுள்ளார். கலிஸூக்கு அழகிகள் தான் பிடிக்கும் போல. இவரது முதல் காதலி கிளிண்டி நெல். 2002இல் மிஸ் தென்னாபிரிக்கா ஆக தேர்வானவர். பின், 2003, மிஸ் தென்னாபிரிக்கா போட்டியில் இரண்டாவது இடம் பெற்ற மரிசா எக்லியுடன் சேர்ந்தார்.

அடுத்து மொடல் அழகி ஷமோன் ஜர்டிமுடன் சுற்றித் திரிந்தார். கடந்த ஆண்டு இவர்களுக்குள் பிரிவு ஏற்பட்ட நிலையில், நான்காவது முறையாக காதலியை மாற்றியுள்ளார் கலிஸ். இவரும் (கிம் ரிவாலாண்ட், 23), 2011இல், தென்னாபிரிக்காவின் மிஸ் எர்த் போட்டியில் வெற்றி பெற்றவர் தான்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த விளையாட்டு விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க, இருவரும் முதன் முறையாக இணைந்து வந்தனர். தவிர, கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி காதலர் தினத்தில், ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். தற்போது, ஏழாவது ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாடி வரும் இவர், கிம்மையும் அழைத்து வந்து விட்டார்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் முதற்கட்ட போட்டிகள் நடைபெற்றபோது, கிடைத்த இடைவெளியில், பாலைவனத்தில் அழகை இரசித்தபடி இருந்த புகைப்படங்களை, கலிஸ் தனது டுவிட்டர் இணையத்தளத்தில வெளியிட்டார். மற்றப்படி, தங்கள் நட்பு குறித்து, இதுவரை இருவரும் எதுவும் தெரிவிக்கவில்லை.

## பிரேசிலுக்கு வாய்ப்பு கிறிஸ் கெய்ல் கணிப்பு

உலகக் கிண்ணக் கால்பந்து கிண்ணத்தை பிரேசில் அணி கைப்பற்றிக்கொள்ள அதிக வாய்ப்பிருக்கின்றது என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

சிறு வயதிலிருந்தே கால்பந்து விளையாட்டில் ஆர்வத்துடன் இருப்பேன். பள்ளி அளவில் 14 வயதுக்குட்பட்டோருக்கான அணியை நான் வழிநடத்தியிருக்கிறேன். வீட்டிற்கு வந்தபின்பும் கால்பந்துதான் விளையாடுவேன். அப்போதெல்லாம், கிரிக்கெட் பற்றிய எண்ணமே இருந்தது கிடையாது.

இதன் பின் 19 வயதுக்குட்பட்டோருக்கான தொடரில் பங்கேற்க இருந்தேன். ஆனால், பயிற்சியில் அதிக நேரம் ஓட வேண்டியிருந்தது. இதற்காகவே, இதில் கலந்து கொள்ளவில்லை. இதன் பின் ஆர்வமும் குறைந்துவிட்டது. தற்போது கிரிக்கெட்டில் கூட ஓட்டங்கள் சேர்க்க அதிகளவு நான் ஓடுவதில்லை என விமர்சனம் செய்வர்.

கிரிக்கெட்டிற்கு வந்தபின், கால்பந்துக்கு என செலவு எதுவும் செய்வதில்லை. போட்டியை இரசித்து பார்ப்பேன். எப்போதுமே நான் பிரேசில் அணியின் இரசிகன். இம்முறை சொந்த மண்ணில் உலகக் கோப்பை தொடர் நடப்பது பிரேசிலுக்கு நெருக்கடியாக இருக்கலாம். சிறப்பான திட்டத்தால் சம்பியன் பட்டம் வெல்லும் என நம்புகிறேன். தனிப்பட்ட முறையில் போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டினோவை பிடிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




கால்பந்து திருவிழா

இன்னும் 23 நாட்கள்

# உலக கால்பந்தாட்ட விழா

## வெல்லப்போகும் அணி எது?



மரியோ யெபஸ்



எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்

தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்

### கொலம்பியா சிறு பார்வை

கொலம்பியா நாட்டின் மக்கள் தொகை 5 கோடி. 1990 இல் இரண்டாம் கட்டத்திற்கு முன்னேறியது.

1994ஆம் ஆண்டு நடைபெற்ற உலக கிண்ணத்தில் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரான போட்டியில், கொலம்பிய பின் கள வீரர் எஸ்கொபர் (Escobar) தவறுதலாக தமது கோலுக்குள் பந்தை செலுத்தியதனால் இரண்டு வாரங்களில் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஒரு கதை உண்டு.

38 வயது, நடு பின்கள வீரர், மரியோ யெபஸ் (Mario Yepes) அணிக்கு தலைமை தாங்குகிறார். கோல் போடுவதில் வல்லவரான 27 வயது பல்கோ (Falcao), 22 வயதான, மத்திய கள ஜேம்ஸ் றொட்றிகஸ் (James Rodriguez) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த, 65 வயதான ஜோஸ்பெகமன் (Jose Pekerman) பயிற்சியாளராவார்.

## மகாத்மாவின் விளையாட்டு விழா





(நெல்லியடி)

நெல்லியடி மகாத்மா விளையாட்டுக்கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறுவர் களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப் பட்டன.

கடந்த புதன்கிழமை மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியின் போது பலூன் உடைத்தல், ஓட்டங்கள், மா ஊதி காசு எடுத்தல், தடைதாண்டல், படம் கீறு தல் போன்ற பல விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

கழகத்தலைவர் ரூபன்பொன்னையா ஜனகன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம அதிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் சுமந்திரன், வடமாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரி கே.எம்.டபிள்யு.பி.கங்கார உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (12)

# டொனால்ட் வெற்றிக் கிண்ண ஒரு நாள் தொடர் பரிஷ், சென்றல், சென்றலைட்ஸ் முன்னேற்றம்

(யாழ்ப்பாணம்)

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் மானிப்பாய் பரிஷ், அரியாலை சென்றல், சென்றலைட்ஸ் புளூஸ், சென்றலைட்ஸ் சொக்ஸ் அணிகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது. சென்றலைட்ஸ் விளை யாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் பரிஷ் மற்றும் ஜொனியன்ஸ் அணி கள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மானிப்பாய் பரிஷ் அணி 48.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெய தீபன் 76, சபேசன் 45, பிரதீபன் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விதுஷன் மூன்று, காண்டீபன், கானமிர்தன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 278 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி 25 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றவேளை மழை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டது. தொடர்ந்தும் பெய்த மழை காரணமாக டக்வேர்த் லூயிஸ் முறைப் படி மானிப்பாய பரிஷ் அணிக்கு வெற்றி வழங்கப் பட்டது. ஜொனியன்ஸ் அணி சார்பில் சஞ்சஜன், கானமிர்தன் ஆகியோர் தலா 48, அகிலன் 24, காண்டீபன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன் இரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் அரியாலை சென்றல் அணியும் ஜொலிஸ்ரார் அணியும் மோதின. முதலில் ஆடிய அரியாலை சென்றல் 40.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோபிராம் 58, லினோதரன் 30, ஜருசன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சார்ங்கன் ஐந்து, மணி, பிரசன்ன ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 234 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 25.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பிரதீபன் 65, பிரசன்னா 24, மணி 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லினோதரன் மூன்று, துவாரகேசன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

சென்றலைட்ஸ் புளூஸ் மற்றும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணிகள் மற்றுமொரு போட்டியில் மோதின. முதலில் ஆடிய சென்றலைட்ஸ் புளூஸ் அணி 44 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை யும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வினோத்குமார் 21, ஜெரிக் துசாந் 36, சுபாஸ்கர் 65, கிசாந்தன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிலோஜனன், ரஜேந்திரம் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 212 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 27.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சுதா-கரன் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நிசாந்தன் நான்கு, ஜெரிக் துசாந், மதுஷன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் சொக்ஸ் மற்றும் பற்றீசியன்ஸ் அணிகள் மோதின. முதலில் ஆடிய சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 43.2 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங் களைப் பெற்றது. இதில் டர்வின் 50, சௌமிதரன் 29, எடின் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நோபேட் மூன்று, அஜித் டர்வின், கிளிங்ரன் ஆகி-யோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 204 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி 23.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பத்மமுரளி 37, தீபன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் ஐந்து, சௌமிதரன், கோகுலன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்

# மாகாணப் பாடசாலைகளின் எல்லே புதுக்குடியிருப்பில் நாளை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டியின் இரண்டாம் கட்டம் நாளை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நடைபெற வுள்ளது. வடமாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவினரால் நடாத்தப்படும் வடமா-காண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா கடந்த ஐந்தாம் திகதி முல்லைத்தீவில் நடைபெற்றது. இந்நிலையில் இரண்டாம் கட்டப் போட்டிகள் நாளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மற்றும் புதுக்குடியிருப்பு பொது மைதா னத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான எல்லேப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான எறிபந்துப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டி களில் பங்குகொள்ளவுள்ள அணிகளுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் உணவு உட்பட சகல வசதிகளும் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட் டிருப்பதாக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (93)




# ஜே.பி.எல். ருவென்ரி-20 வென்றது ஜொனியன்ஸ், பரிஷ், ஸ்கந்தா ஸ்ரார்

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் ஜொனியன்ஸ், மானிப்பாய் பரிஷ், ஸ்கந்த ஸ்ரார் அணிகள் வெற்றி யீட்டியுள்ளன.

இப்போட்டித் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் மூன்று போட்டிகள் நடைபெற்றன.

முதலாவது போட்டியில் ஜொனி யன்ஸ் மற்றும் நியூஸ்ரார் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங் களைப் பெற்றது. இதில் காண்டீபன் 26, சஞ்சஜன் 27, அன்புஜன் 15, லவேந் திரா 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றொசான் இரு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 159 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கள மிறங்கிய நியூஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் றொசான் 26, கபில்ராஜ் 44, ரம்மிய ராகுலன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விதுஷன் இரண்டு, சஞ்சஜன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டி யின் ஆட்டநாயகனாக சஞ்சஜன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் பரிஷ் மற்றும் ஸ்ரான்லி அணி கள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய மானிப்பாய் பரிஷ் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட் டங்களைப் பெற்றது. இதில் சபேசன் 29, ஜெயதீபன் 26, ஆன்சிலி 16, ரஜீவ் கரன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜதீபன் நான்கு, டுசியந்தன், உதயசபேசன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 154 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரான்லி அணி 16.5 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வி யைத் தழுவியது. இதில் எனோஜன் 22, கஜதீபன் 18, டுசியந்தன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் வினோத்குமார் மூன்று, நிதர்சன் இரண்டு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக மானிப்பாய் பரிஷ் அணியின் சபேசன் தெரிவானார்.

மற்றுமொரு போட்டியில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி மற்றும் ஸ்கந்தா ஸ்ரார் அணிகள் மோதின. முதலில் ஆடிய ஸ்ரீகாமாட்சி அணி 20 ஓவர்கள் நிறை வில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அரவிந்தன் 55, திவாகர் 28, கார்த்திக் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஸ்ணு பிரகாஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 156 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றி என்ற நிலையில் கள மிறங்கிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக் களை . இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் விஸ்ணு பிரகாஸ் 26, நிரோஜன் 17, நிசாகரன், துபீகன் ஆகியோர் தலா 13, சிந்துஜன் 28, ஸ்ரீகஜன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கார்த்திக், சுதர்சன், கேதீஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக விஸ்ணு பிரகாஸ் தெரிவு செய்யப்பட்டார். (48)











# தமிழ்செல்வனின் மனைவி, குழந்தைகள் பிரான்சுக்கு வந்ததில் வெளிநாட்டு புலிகள் வட்டாரங்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளன



தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சுப்பையா பரமு தமிழ்செல்வனின் குடும்பம் பிரான்சுக்கு வந்தது, உலகத் தமிழர் புலம்பெயர் பகுதிகளில் உள்ள புலிகள் மற்றும் புலிகள் சார்பு வட்டாரங்களுக்கு அளவற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்செல்வனின் மனைவி சசிரேகா தனது மகள் அலைமகள் மற்றும் மகன் ஒளிவேந்தன் சகிதம் 24 எப்ரல் 2014 இல் பிரான்சுக்கு வந்து சேர்ந்துள்ளார்.

புலம்பெயர் பகுதிகளில் உள்ள முன்னணி எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் இந்த வருகையினால் மிகவும் உற்சாகமடைந்துள்ளார்கள், ஏனெனில் அந்தக் குடும்பத்தைக் காட்டி வெளிப்படையாக பிரசாரம் செய்து, வெளிநாடுகளில் இரகசியமாக பணம் திரட்டப் பயன்படுத்தலாம் என அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

எனினும் அந்த குடும்பத்துக்கு நெருங்கிய உறவினரான ஒருவர், புலிகள் சார்பான மேடையில் தமிழ்செல்வனின் விதவை இந்தச் சமயத்தில் தோன்றுவதற்கான சாத்தியம் இல்லை என்றும் பிரான்சுக்கு இடம்பெயர அவர் முடிவு செய்தது, வெளிநாட்டில் ஒரு அமைதியான வாழ்க்கையை தொடரவும் மற்றும் அவரது குழந்தைகளை படிக்க வைப்பதற்குமே தவிர புலம்பெயர் அரசியலில் ஈடுபடுவதற்கல்ல என்று தெரிவித்தார்.

வெளிநாட்டில் அரசியல் பாத்திரம் ஒன்றில் பங்குபற்றும்படி திருமதி சசிரேகா தமிழ்செல்வனின்மீது கணிசமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதை ஒப்புக்கொண்ட அந்த உறவினர், தான் இயல்பான வாழ்க்கையை தொடர விரும்புவதாகவும் மற்றும் அரசியல் பிரச்சினைகளில் திரும்பவும் சிக்க விரும்ப வில்லை எனக்கூறி திருமதி தமிழ்ச்செல்வன் அதை எதிர்த்து வருவதாகவும் தெரிவித்தார்.

மே 2009இல் முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவத் தோல்விக்குப் பின்னர் சசிரேகாவும் அவரது பிள்ளைகளும் பொதுமக்கள் என்ற வகையில் இராணுவத்திடம் சரணடைந்தபோது, வவுனியாவில் எல்.ரீ.ரீ.ஈயின் குடும்பங்களுக்கான விசேட முகாமில் அடைக்கப்பட்டார்கள். பின்னர் அவர்கள் குடும்பம் பனாகொடவுக்கு நகர்த்தப்பட்டு முன்னாள் கிழக்குப் பிராந்தியத் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் என்கிற கேணல் கருணாவின் முயற்சியினால் இராணுவ முகாமுக்குள்ளேயே ஒரு சிறு குடிலில் தங்க வைக்கப்பட்டார்கள்.

இரண்டரை வருடங்களை பாதுகாப்புக் காவல்களுடன் பனாகொட முகாமுக்குள் இருந்த சிறு குடிசைக்குள் கழித்த பின்னர், நெருங்கிய உறவினர்களுடன் கண்காணிப்புடன் கூடிய தொடர்புகளை மேற்கொள்ள அந்த குடும்பத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மே 2011இல் அந்த குடும்பத்துக்கு பாதுகாப்புக் காவலில் இருந்து சில நிபந்தனைகளுடன் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட விடுதலை கிடைத்தது. சசிரேகா தெகிவளையில் உள்ள தனது பெற்றோர்களுடன் வசிப்பதை தெரிவு செய்தார். வெளிநாட்டில் வதியும் எல்லா உறவினருடனும் இல்லாவிட்டாலும் அநேகமான தனது உறவினர்களுடனான தொடர்பை அவர் துண்டித்துக் கொண்டார்.

தனது பிள்ளைகளை கொழும்பில் வைத்து படிப்பிப்பதற்கு கடினமாக இருப்பதை அறிந்த சசிரேகா தமிழ்ச்செல்வன், தனது இரண்டு பிள்ளைகளுடன் தான் இந்தியாவிற்கு இடம்பெயர அனுமதிக்குமாறு இலங்கை அதிகாரிகளின் சம்மதத்தை கோரினார். அவரது விடயத்தை கருணையோடு பரிசீலித்த இலங்கை அதிகாரிகள் கட்டுப்படுத்தப்பட்ட விடுதலை உத்தரவிலிருந்து அவரை முற்றாக விடுவித்து உத்தரவு பிறப்பித்தார்கள்.

முறையான பயணப் பத்திரங்களுடன் சட்டபூர்வமாக அவர் கடந்த வருடம் இந்தியாவிற்குச் சென்றார். இந்தியாவிற்குச் செல்வதற்கு ஐக்கிய இராச்சியத்திலுள்ள அவரது ஒரு சகோதரர் நிதி உதவி செய்தார். இந்தியாவில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ பரப்புரையாளர்களான நெடுமாறன், வைகோ, சீமான், மற்றும் கொளத்தூர் மணி போன்றவர்கள் தங்களை கண்டு பிடித்து வெளிப்படுத்தி விடுவார்களோ என்கிற அச்சம் காரணமாக இந்தக் குடும்பம் தங்களைப் பற்றிய சுயவிபரங்களை அதிகம் வெளிக்காட்டாமலே நடந்து கொண்டார்கள்.

தனது பிள்ளைகளை இயல்பான நிலையில் வளர்ப்பதற்கு இந்தியாவின் சூழ்நிலை பொருத்தப்படாது என்பதைக் கண்ட சசிரேகா ஐரோப்பாவிற்கு இடம்பெயர தீர்மானித்தார். பிரித்தானியாவில் உள்ள சகோதரர் மற்றும் அத்தை ஆகியோரின் உத வியுடன் பிரான்சில் வசிக்கும் தமிழ்ச்செல்வனின் தாயாரின் சகோதரியின் உதவி யையும் பெற்று ஏப்ரல் 24இல் பிரான்சை வந்தடைந்தார்.

சசிரேகாவின் நெருங்கிய உறவினர் ஒருவர் மூலமாக நம்பத்தகுந்தபடி அறியமுடிவது, சசிரேகா பொதுவாக அரசியல் மற்றும் புலி சார்பு நடவடிக்கைகள் என்பனவற்றில் ஈடுபடாமல் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து தனது பிள்ளைகளை படிப்பிக்கவே விரும்புகிறாராம். எனினும் முக்கியமான எல்.ரீ.ரீ.ஈ பிரமுகர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அவருக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்களாம், அத்தகைய நடத்தைகள் ஐரோப்பாவில் நிரந்தர வதிவிடம் பெறுவதை பாதிக்கக்கூடும் என்று சுட்டிக் காட்டியபோதும் அவர்கள் அதைச் செய்து வருகிறார்கள்.

மேலும் அறியக்கூடியதாக உள்ளது, ஏற்கனவே பணம் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள சில புலிச்செயற்பாட்டாளர்கள், அவரைப் பிரான்சுக்கு கொண்டுவந்த முகவர்களுக்கு தாங்கள் பணம் கொடுக்க வேண்டியுள்ளது என்று இரகசியமாகச் சொல்லி பணம் சேகரிக்கிறார்களாம். அவரது குடும்பம் கொழும்பிலிருந்து இந்தியாவுக்கு சுதந்திரமாக இடம் பெயருவதற்கு இலங்கை அதிகாரிகள் அனுமதி அளித்துள்ள போதிலும், அவரது வரவுக்கான சூழ்நிலை "இலங்கை அரசாங்கத்தின் பிடியிலிருந்து" தப்பி வந்ததாக தவறாகச் சித்தரிக்கப்படுகிறது.

சசிரேகா அரசியல் செயற்பாடுகளை தவிர்த்து தனது பிள்ளைகளை கல்வி கற்பிப்பதில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டும் என்று தீர்மானமாக இருந்தாலும், புலம்பெயர்ந்தவர்களிடையே உள்ள புலிச் சக்திகள் அவ்வரை அப்படி இருப்பதற்கு விட்டுவிடுமா என்பது சந்தேகம்தான். இந்த வட்டாரங்களுக்கு சசிரேகாவின் வரவு பிரசாரத்தை புதுப்பித்து பணச் சேகரிப்பை அதிகரிக்க கடவுள் அனுப்பிய ஒரு வரவு என்றுதான் சொல்லவேண்டும்.

காற்று, மரத்தை நிலையாக நிற்கவிடாது என்கிற சீன பழமொழியின்படி, புலம்பெயர்ந்தவர்களிடையே உள்ள புலிகள் மற்றும் புலிகள் சார்பு சக்திகள் தமிழ்ச்செல்வனின் விதவை சசிரேகாவை அரசியலில் இருந்து விலகியிருக்க விடுவதற்கான சாத்தியமில்லை.. திருமதி சசிரேகா மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளும் புலம்பெயர் தீவிரவாதிகளின் அழுத்தத்தை எதிர்த்து நின்று அமைதியும் சமாதானமும் மிக்க செழிப்பான வாழ்வை இந்த புதிய வாழ்விடத்தில் வாழவேண்டும் என்பதே இந்த எழுத்தாளனின் ஆர்வம்

- டி.பி.எஸ். ஜெயராஜ் கட்டுரையிலிருந்து

# நோக்கியா விடைபெற்றது!

NOKIA Connecting People



Microsoft

முதன் முதலில் மொபைல் போன்கள் மக்களை அடைந்த போது அனைவரின் மனதிலும் இருந்த ஒரு பெயர் நோக்கியா. பின்லாந்து நாட்டில் எஸ்போ (Espoo) நகரில் தன் தலைமை இடத்தைக் கொண்டு, பன்னாடுகளில் கிளைகளை அமைத்து, மொபைல் போன்களை அனைத்து நிலை மக்களுக்கும் என தயார் செய்து வளர்ந்து, உயர்ந்த நிறுவனம் நோக்கியா.

கடந்த 12 ஆண்டுகளாக மொபைல் போன் பயன்படுத்தும் அனைவரும், நோக்கியா போனில் தான் முதன் முதலில் தொடங்கி இருப்போம். கையில் எடுத்துச் சென்று பயன்படுத்தும் டிஜிட்டல் சாதனமாக, நோக்கியா போன்கள் தான் முதலில் நமக்கு அறிமுகமாயின.

இன்று அதற்கு விடை கொடுத்துவிட்டோம். நோக்கியாவினை முழுமையாக, மைக்ரோசொப்ட் சென்ற ஏப்ரல் 25 அன்று தனதாக்கிக் கொண்டது. அதற்கு Microsoft Mobile Oy எனப் பெயர் சூட்டியுள்ளது. மிக நன்றாக இயங்கும் வலிமையான நிறுவனங்கள் கூட ஒரு நாளில் விழலாம் என்ற படிப்பினையை நாம் நோக்கியாவிடமிருந்து கற்றுக் கொண்டுள்ளோம்.

750 கோடி டொலர் தொகைக்குத்தான் நோக்கியா கை மாறியுள்ளது. 2007 வரை 41 சதவீத சந்தைப் பங்கினைக் கொண்டிருந்த நோக்கியா தொடர்ந்து சரிந்து, வேறு வழியின்றி தன்னை மைக்ரோசொப்ட் வசம் ஒப்படைத்துள்ளது. உற்பத்தி மற்றும் வடிவமைப்பு உரிமைகளுடன், ஏறத்தாழ 50 நாடுகளில் நோக்கியாவின் தொழிற்சாலை மற்றும் அலுவலகங்களில் பணிபுரியும் 25,000 தொழிலாளர்களையும், மைக்ரோசொப்ட் தன் குடைக்குள் கொண்டு வந்துள்ளது.

நோக்கியா உச்சத்திலிருந்த போது, வேறு எந்த நிறுவனமும் அதனைத் தொட முடியவில்லை. அதுவே, ஓர் அரக்கத்தனத்தை அந்நிறுவனத்திற்குக் கொடுத்தது. முதலில் அதனை அசைத்துப் பார்த்தது மோட்டாரோலா ரேசர் மற்றும் அப்பிள் ஐபோன்களே. தன்னுடைய பங்கு இல்லாமலே, தான் ஆண்டு வந்த மொபைல் சாம்ராஜ்யம் முன்னேறுவதனைப் பார்த்த போது, நோக்கியா தன் தவறை உணர்ந்தது. தனக்கே உரிமையான மொபைல் போன் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தினைக் கைவிட்டு, விண்டோஸ் போன் சிஸ்டத்தினை தத்தெடுத்தது. மூன்று ஆண்டுகள், தன் லூமியா போன்களை சந்தையில் கொண்டு வந்து ஓரளவு இடம் பிடித்தது. ஆனாலும் இறுதியில் மைக்ரோசொப்ட் நிறுவனத்திடம் தஞ்சம் கொண்டது.

இனி, மைக்ரோசொப்ட் நிறுவனம், லூமியா போன்களில், தன் விண்டோஸ் போன் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தின் மூலம் கூடுதல் வசதிகளைத் தந்து, நோக்கியா போன்களை மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டு வரலாம்.

# சின்னச் சின்ன...

♦ ஹிந்தி திரையுலகப் பிரபலங்களிடையே இப்பொழுது சுயசரிந்த எழுதுகிற சீசன். சமீபத்தில், ஹிந்தி வில்லன் நடிகர் பிரேம் சோப்ரா வாழ்க்கையை அவரது மகள் ரகி தாநுந்தா எழுதி வெளியிட்டார். பிரேம் சோப்ரா, பிரபல நடிகர்களான பிரிதிவி ராஜ்கபூர், ராஜ்கபூர், ரந்திர் கபூர், ரிஷிகபூர் என ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு தலைமுறை நடிகர்கள் மற்றும் இவர்களில் சிலரது மனைவிகளுடனும் நடித்த அனுபவம் கொண்டவர்.

இதனைத் தொடர்ந்து, நடிகர் திலீப்குமார் வாழ்க்கைச் சரித்திரத்தை "ஹே.. ஹவுஸ்" நிறுவனம் வெளியிடு கிறது. வகிதா ரஹ்மான் சரிதையை பெங்குயின் வெளியிட இருக்கிறது.

சத்யஜித்ரே குறித்து மேலும் ஒரு நூல். அதாவது அவர் படம் எடுத்த 14 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளியாகவுள்ளது.

♦ தாகூர் நோபல் பரிசு பெறும் வரை அவருக்குச் சொந்த ஊரில் மதிப்புக் கிடைக்கவில்லை. கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தாகூருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கும் தீர்மானம் பிரேரிக்கப்பட்டபோது அது நிராகரிக்கப்பட்டது. மேலும் தாகூரை இழிவுபடுத்தும் நோக்கில் தாகூரின் [illegible]வகாள நூல்களிலிருந்து சில பந்திகளைக் கொடுத்து அவற்றைப் பிழையின்றி எழுதும்படி மாணவர்களுக்கான கேள்வித் தாளில் கேட்டிருந்தார்களாம். நோபல் பரிசு கிடைத்த பின்பே கல்கத்தா பல்கலைக் கழகம் அவரை வலிய அழைத்து டாக்டர் பட்டம் கொடுத்தது.

♦ இந்து மதத்தில் கடவுள்களுக் காக எழுதப்பட்ட புராணங்களைப் பற்றி அறிவோம். ஆனால், வேளாண் துறைக்கு எனப் புராணமும் உண்டு!

தமிழகத்தைச் சேர்ந்த கந்தசாமிக் கவிராயர் என்பவர் எழுதிய வேளாளர் புராணம் 29 படலங்களை யும் 1373 பாடல்களையும் கொண்டது. வேளாண் முறைகளை யும் கால்நடை வளர்ப்பையும் விளக்கும் இந்தப் புராணம் 1902 ஆம் ஆண்டு வெளியானது!

♦ தோமஸ் அல்வா எடிசன், நூற்றுக்கும் அதிகமான புதிய கண்டுபிடிப்புகளைத் தந்தவர். 1914 ஆம் ஆண்டு, ஒருநாள் அவருடைய பரிசோதனைச் சாலை தீப்பிடித்து எரிந்தது. அனைத்தும் எரிந்துவிட்டன. அடுத்தநாள் காலை பரிசோதனைச் சாலையைப் பார்வையிட்ட எடிசன் கூறினார்.

"தீ பிடித்து எரிவதிலும் நன்மை உள்ளது. அத்துடன் நம்முடைய தவறு களும் எரிந்து போய் விடுகின்றன அல்லவா! அது புதிய முயற்சிக்கு வழிவகுக்கும்".

♦ அன்றாடம் பேச்சுவழக்கில் இப்போது வழங்கும் "சொற்பொழிவு" என்னும் அழகான தமிழ்ச்சொல்லை உருவாக்கியவர் தமிழறிஞர் பால்வண்ண முதலியார் ஆவார். "எப்படி மேடையில் பேசுவது" என்பது பற்றி "சொற்பொழிவாற்றுப் படை" என்னும் சிறந்த நூல் ஒன்றை இவர் எழுதியிருக்கிறார்.

♦ கிரேக்க நாடக ஆசிரியர் ஆஷிலஸ் ஆமையால் இறந்து போனார் என்றால் நம்ப முடிகிறதா? ஆனால் உண்மைதான். ஆஷிலஸ் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, பெரிய வல்லூறு ஆமைய்யைக் கால்களில் பிடித்துத் தூக்கிக்கொண்டு பறந்து வந்தது. வல்லூறு தன் கால்களில் இருந்த ஆமையை நழுவ விட, அது வீதியில் நடந்து வந்த ஆஷிலஸ் தலையில் விழுந்து, அவர் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து இறந்து போனார்.











♦ அவரிடம் இருக்கும் முக்கியமான குணம், "பாராட்டுவதைத் தாமதிக்காதே" என்பதுதான்.

கதையோ, கட்டுரையோ ஏன் ஒரு சின்ன துணுக்கைக் கூட அவரது பத்திரிகையில் படித்தவுடன், "இது நன்றாக இருக்கிறது!" என்று அவரிடம் சொல்லிவிட்டால் போதும்... அடுத்த நிமிடமே அதை எழுதியவரைப் போனில் கூப்பிட்டோ, வெளியூராக இருந்தால் தம் கைப்பட கடிதம் எழுதியோ பாராட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். கதைக்கு வரையப்படும் ஓவியங்களில் ஒன்று மிகச் சிறப்பாக அமைந்துவிட்டால், உடனே அந்த ஓவியரைத் தனிப்பட்ட முறையில் பாராட்டிவிட வேண்டும் அவருக்கு. "இப்படிப்பட்ட பாராட்டுகள், அந்தப் படைப்பாளிக்கு எவ்வளவு பெரிய ஊக்கியாக வேலை செய்கிறது என்பது அவரது அடுத்த படைப்பிலேயே தெரியும்!" என்பார்.

எழுத்தாளர் பத்திரிகையாளர் சாவியைப் பற்றி அவரது மகள்.

# முகவரி தொலைத்த முகங்கள் 4

**- சாத்திரி -**

கப்பலில் இருக்கும் உதவிப் படகு ஒன்றின் மூலம் குட்டியை பர்மாவின் ஒரு கரையோர நகரத்திற்கு அனுப்பி வைக்கும்படியும் அங்கு வைத்தியத்திற்கான ஏற்பாடுகள் செய்து விடுவதாகவும் அதே நேரம் குறித்த நாள் குறித்த நேரத்திற்கு கப்பல் முல்லைத்தீவுக் கடலிற்குள் நுழைந்து விடவேண்டும் என்கிற உத்தரவோடு அன்றிரவு தாய்லாந்திலிருந்து பதில் வந்திருந்தது. மறுநாள் சித்தாவும் றோகனும் படகு மூலம் குட்டியை பர்மாவிற்கு கொண்டுபோய் சேர்த்துவிட்டு வருவதாக முடிவெடுத்திருந்தார்கள்.

அன்றிரவு ஒருவரோடு ஒருவர் பேசாமல் மௌன-மாகவே கழிந்து கொண்டிருந்தது. ராஜனே குட்டிக்கு பக்கத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்தவன் அசதியில் தூங்கிப் போய் விட்டிருந்தான். அதிகா[illegible]யளவில் திடுக்கிட்டு கண்விழித்து குட்டியை பார்த்தவன் திடுக்கிட்டவனாய் அவனது மூக்கில் கையை வைத்துப் பார்த்துவிட்டு இதயத்தில் காதையும் வைத்துப் பார்த்தவன் அடுத்த அறை யில் நித்திரையிலிருந்த றோகனை அவசரமாக தட்டியெழுப்பிக் கூட்டி வந்தான். ஓடிவந்த றோகன் குட்டியின் கையில் நாடி பிடித்துப் பார்த்து விட்டு கைகளை குறுக்காக அவனது இதயத்தில் வைத்து பலமாக பலமுறை விட்டு விட்டு அமுக்கியவன் ராஜனைப் பார்த்து தலையை மெதுவாக இடம் வலமாக அசைத்தான்.

குட்டி இறந்து விட்ட செய்தியை தாய்லாந்து தலைமையகத்திற்கு வரதன் அறிவித்தார். உடலை கடலில் வீசி விட்டு பயணத்தை தொடருமாறு கட்டளை வந்திருந்தது. குட்டியின் உடலைச் சுற்றி நின்றவர்களிடம் வந்த வரதன் விடயத்தை சொன்னதும் றோகனும் சித்தாவும் எதிர்த்ததோடு கப்பல் பயணிக்கின்ற வழியில் கப்பலை நிறுத்தி படகில் உடலை எடுத்துச் சென்று எங்காவது ஒரு நாட்டுக் கரையில் அல்லது தீவில் புதைத்துவிடலாமென்று வாதிட மற்றையவர்கள் மௌனமாக நின்றிருந்தனர்.

கப்பலில் உள்ள பொருட்களின் பெறுமதி என்பது மட்டுமல்லாமல் அது குறித்த நேரத்திற்கு கொண்டு போய் சேர்க்கவேண்டிய கட்டாயம் கப்பல் சர்வதேச எல்லையில் இருந்து விலகி வேறு பாதையில் பயணித்தால் இந்திய இலங்கை கடற்படையால் வரக்கூடிய ஆபத்துக்கள் என்ன என்று எல்லாமே வரதன் சொல்லிப் பார்த்தார். ஆனால் றோகனும் சித்தாவும் விடுவதாக இல்லை. பொருட்களை இறக்கி விட்டு திரும்பும்வரை 12 நாட்களிற்கு குட்டியின் உடலை சமையலறையில் உள்ள குளிர்சாதனப் பெட்டிகளில் பாதுகாக்கலாமா என்றும் ஆலோசித்தார்கள். ஆனால் அவை ஒரு உடலைப் புகுத்த முடியாத சிறிய சதுரவடிவங்களாக வடிவமைக்கப்பட்டிருந்தது.


அப்போதுதான் ஏதோ யோசித்தவனாக சித்தா அனைவரையும் மாலுமி அறைக்குள் அழைத்துப் போனவன் அங்கிருந்த கணனியில் கப்பலின் பயணப் பாதையை வரதனிற்கு காட்டியபடி அண்ணை இங்கை பாருங்கோ நாங்கள் போற பகுதியிலை இந்தப் பக்கமா நிக்கோபர் தீவுகள் இருக்கு. கப்பலை கிழக்குப்பக்கமா E 51 கோட் டிலை கொஞ்சம் நகர்த்தினால் போதும் இந்த இடத்திலை இருந்து நாங்கள் வழக்கமா போற நாவல்த்தீவு கிட்டத்தான் இருக்கு. நாங்கள் படகிலை உடலைக் கொண்டுபோய் இங்கை புதைச்சிட்டு வந்திடுவம். கப்பலும் சொன்ன நேரத்துக்கு சொன்ன இடத்திற்கு போய் சேர்ந்திடும் ஒரு பிரச்சினையும் இல்லை. குட்டியை வைத்தியத்திற்கு பர்மாவிற்கு கொண்டு போறதுக்கும் நாங்கள் இவ்வளவு தூரம் போய் இதேயளவு றிஸ்க் கட்டாயம் எடுத்திருக்கத் தான் வேணும். நீங்கள் மனம் வைச்சால் செய்யலாமண்ணை என்று மடமடவென்று பேசிவிட்டு அனைவரையும் பார்த்தான்.

தனது குறுந்தாடியை சில வினாடிகள் சொறிந்தபடி யோசித்த வரதன், சரி.. கெதியா பேர் மாத்திற வேலையளை முடிப்பம். சித்தா சொன்ன இடத்திற்கு போறதுக்கு மூன்று நாள் பயணம் செய்யவேணும். உடலைக் கொண்டு போய் புதைச்சிட்டு வாறதுக்கு ஆறு மணித்தியாலம் தரலாம். அதுக்குள்ளை எல்லாத்தையும் முடிச்சிட்டு வந்திட வேணும். அதே நேரம் குட்டியின்ரை உடலை நாலு நாளைக்கு இப்பிடியே வைச்சிருக்க ஏலாது. அதை ஒரு போர்வையாலை நல்லா சுத்தி அதுக்கு மேலை பொலித்தீன் ஒன்றாலையும் முழுதா மூடி சுத்திக்கட்டி கப்பலின்ரை அடித்தளத் திலை கொண்டு போய் வையுங்கோ அங்கை குளிரா இருக்கும் அதாலை லேசிலை பழுதாகாமல் இருக்கும் என்று சொன்னதும் அனைவரும் ஒரு நிம்மதிப்பெருமூச்சோடு மிகுதி வேலைகளைத் தொடருவதற்காக அங்கிருந்து கிழம்பிப் போனார்கள்.

கப்பல் பெயர் மாற்றும் வேலைகளை முடித்துக் கொண்டு தொடர்ந்த பயணத்தின் நான்காவது நாள் அதிகாலை சூரியன் லேசாய் சோம்பல் முறித்து கடற்போர்வையை விலக்கி எழத் தொடங்கியிருந்த நேரம் நங்கூரம் இடப்பட்டிருந்த கப்பலில் பரபரப் பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். உதவிப் படகில் குட்டியின் உடலும் பள்ளம் தோண்டுவதற்கு வேண்டிய உபகரணங்களும் ஒரு நீலக் கலர் பிளாஸ்ரிக்பேப்பரால் மூடப்பட்டிருந்தது. சித்தாவும், றோகனும், அன்ரனும் படகில் போய் குட்டியின் உடலைப் புதைத்துவிட்டு வருதாக முடிவெடுத்திருந்தார்கள்.

சித்தா உதவிப் படகில் எரிபெருளை சரிபார்த்த தோடு மேலதிகமாகவும் இரண்டு எரிபொருள் கேன்களை எடுத்து வைத்து விட்டு திசை காட்டி தொலைத் தொடர்புக் கருவி பைனாக்குலர் என வேண்டிய அனைத்தையும் தயார் செய்து வைக்க கப்பலின் சமயலறைப் பகுதிக்கு சென்ற றோகனும் அன்ரனும் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத் துப்பாக்கிகளை எடுத்து சரிபார்த்து இடுப்பில் செருகிக் கொண்டு படகில் ஏறி அமர்ந்தார்கள். படகு மெதுவாக கடலில் இறங்கியதும் கப்பலுட னான அதன் இணைப்பை அன்ரன் எடுத்துவிட சித்தா படகை இயக்கினான். கப்பலில் நின்றவர் களைப் பார்த்து றோகன் கை கட்டை விரலை உயர்த்திக் காட்டினான். படகு நாவல்த்தீவை நோக்கி பயணிக்க ஆரம்பித்திருந்தது.

(தொடரும்)







# நிகழ்வுகளின் பதிவுகள்....

பண்டத்தரிப்பு புனித பற்றிமா ஆலயத்தின் நவநாள் வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்றது இதில் திருப்பலிப் பூசை இடம்பெறுவதையும், கலந்து கொண்ட அடியார்களையும் காணலாம். (48)









யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற்ற இயல் இசை நாடக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் பட்டிமன்றத் தலைவர் பேராசிரியர் வேல்நம்பிக்கு பேராசிரியர் சிவலிங்கராஜா விருது வழங்கிக் கௌரவிப்பதையும், கலை நிகழ்வுகளையும் காணலாம்.

இலங்கை வங்கியின் கிளை அலுவலகம் கோப்பாய் பருத்தித்துறை வீதியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வங்கியின் வடமாகாண உதவிப்பொது முகாமையாளர் பீ.நந்தகுமார் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் வங்கி அதிகாரி சிறுவனுக்கு பரிசு வழங்குவதையும் காணலாம். (137)









வெசாக் தினத்தன்று பளைப்பகுதியில் பொலிஸார் பொதுமக்களுக்கு தானம் வழங்குவதைக் காணலாம். (37)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களமும் தென்மராட்சி மாதர் கிராம அபிவிருத்தி சங்கமும் இணைந்து நடாத்திய தையல் கண்காட்சி நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் மங்களவிளக் கேற்றுவதைக் காணலாம். (14)





கோண்டாவில் இந்துமகாவித்தியாலய தமிழ்த்தின விழா கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலை நிகழ்வு இடம்பெறுவதையும், நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.அகிலதாஸ் மாணவிக்கு சான்றிதழ் வழங்குவதையும் காணலாம். (10)

# அவதூறுகள் அனைத்தும் தவறு மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மீது சுமத்தப்பட்ட அவதூறுகளுக கும் எங்களுடைய செயற்பாடு களுக்கும் இடையேயான வேறு பாடுகளை நேரில் கண்டு உணர்ந்த நிலையில் மக்கள் எமது செயற் பாடுகளுக்கு தங்களின் ஆதர வினை வெளிப்படுத்தி வருகின்ற னர் என நாடாளுமன்ற உறுப்பி னரும் நாடாளுமன்றக்குழுக்களின பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிளி நொச்சி கரைச்சி,கண்டாவளை பிரதேசங்களில் இடம்பெற்ற கட்சி ஆதரவாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடனான சந் திப்பின் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்,

ஜனநாயக ரீதியில் தனித் தரப்பாக நின்று அரசியல் செய் வதனால்,போலியான தமிழ்த் தேசியம் பேசுகின்ற எதிர்த்தரப்பினா களுக்கு நாங்கள் சவால்கள் மிக்கவர்களாக காணப்படுகின் றோம். இதனாலேயே மக்கள் மத்தியில் எங்கள் மீதான திட்ட மிட்ட அவதூறு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் எங்களின் செயற்பாடு கள் இந்த அவதூறு பிரசாரங் களை பொய்ப்பித்து வருகிறது.

இன்று தமிழ்த்தேசியம் பேசு கின்ற கூட்டமைப்புக்குள் இருக் கின்ற சில கட்சிகள் இறுதி யுத் தம் வரைக்கும் இலங்கை படை களுடன் இணைந்து தொண்டர் படைகளாக செயற்பட்டவர் களே அரசாங்கத்திடம் இருந்து கொடுப்பனவுகளை பெற்றுக் கொண்டு இராணுவத்துடன் இணைந்து தமிழ் மக்களுக்கு ஏதிராக செயற்பட்டவர்கள். இன்று தமிழ்த்தேசியம் பற்றியும் தமிழ் மக்கள் பற்றியும் பேசு கின்றனர் என்றார்.

இந்நிகழ்வுகளில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவ நாதன்,பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், கரைச்சி பிரதேச சபை உறுப் பினர்களான சு.மனோகரன், இராமச்சந்திரன், கண்டாவளை பிரதேச ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அமைப்பாளர் செல் வம், கட்சியின் ஆதரவாளர்கள் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விடைபெறுகிறார் மகாலிங்கம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் வே. மகாலிங்கம் த்னது கடமைகளை நிறைவு செய்துகொண்டுஎதிர்வரும் வெள்ளிக் கிழமை இந்தியா திரும்புகின்றார்.

தென்னாபிரிக்காவில் கஜானாவிற்கான உயர்ஸ்தானிகராக இவர் மாற்றம் பெற்று அங்கு செல்லவுள்ளார்.இதனை அடுத்து யாழ். இந்தியத் துணைத்தூது வராக கண்டியிலுள்ள துணை தூதரகத்திலுள்ள என்.நடராஜன் கடமைகளைப் பொறுப்பேற்பார் என யாழ். இந்தியத் துணைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித் துள்ளன. (25)

# இரணைதீவு கடற்பரப்புக்குச் செல்ல குருநகர் கடற்றொழிலாளர்களுக்கு தடை

(யாழ்ப்பாணம்)

இரணைதீவுக்கடற்பரப்பில் குருநகர் கடற்றொழிலாள்கள் கடற் றொழிலில் ஈடுபடுவதற்கு அங்குள்ள கடற்படையினர் தடை விதித்துவருவதாக குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வி.பிறேம் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் குறித்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப் பாளர் ந. கணேசமூர்த்தியின் கவனத்திற்குக்கொண்டுவந்திருப்ப தாகவும் தெரிவிக்கப்ப்டுகின்றது.


இரணைதீவுப்பகுதி கடற்றொழிலாளர் மட்டுமே அங்கு தொழிலில் ஈடுபடமுடியுமென்றும் கடற்படையின்ரால் தெரிவிக் கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

# மகோற்சவம்

வில்லூன்றி வீரகத்தி விநா யகர் ஆலயத்தின் மகோற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

இத்திருவிழாவில் எதிர்வரும் 27· ஆம் திகதி தேர்த்திருவிழா வும் 28ஆம் திகதி தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறவுள்ளது.

# ஐங்கரன் விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் அன்பளிப்பு



நீண்டகாலமாக இயங்காதி ருந்த எழுதுமட்டுவாள் வடக்கு ஐங்கரன் விளையாட்டுக்கழகம் தற்போது புதிய நிர்வாகத்தின ருடன் மீண்டும் உருவாக்கப் பட்டுள்ளது.

கழகத்தின் அபிவிருத்தி நட வடிக்கைகளை மேற்கொள்வதற் காக கழக நிர்வாகத்தினர் கடந்த வாரம் அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரனை (வி.கே. ஜெகன்) கட்சி அலுவலகத்தில் சந்தித்து தமது கழக நிலைமை கள் தொடர்பாக கலந்துரை யாடி அமைச்சர் ஊடாக உதவி பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

கழக நிர்வாகத்தினரின் கோரிக் கையை ஏற்று அப்பகுதியில் க்ழகத்தை அபிவிருத்தி செய்து இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற் கான உடனடித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள விளை யாட்டு உபகரணங்கள் சந்திப் பின் போது அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேலும் அமைச் சின் ஊடாக கழக அபிவிருத் தியை் மேற்கொள்வதற்கு நட வடிக்கை எடுப்பதாகத் தெரி வித்தார்.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

எங்களது இரண்டரை வயது குழந்தையை பராமரிப் பதற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. தனி அறையுடன் 15,000- 20,000 வரை வழங்கப்படும் (வெள்ள வத்தை) 0729533679.

---

நாங்கள் இருவரும் காரியால்யத்திற்கு செல்வதால் எங்களது 3 வயது குழந்தையை பராமரிப்பதற்கு சிங்க ளம் பேசக்கூடிய தமிழ் பணிப்பெண் ஒருவரை உடனே எதிர்பார்க்கின்றோம். தனி அறையுடன் 15,000- 20,000 வரை வழங்கப்படும் உடன் தொடர்பு கொள்ளவும். 0113370110.

---

அனுபவம் உள்ள, அற்றவர்களுக்கான நிரந்தர வேலைவாய்ப்பு நவீன கப்பல் துறைமுகத்தில் வெல்டர் தச்சு, இலக்ரீசியன், பெயின்டர், கிலினீங், சாதாரண, ஊழியர்கள் மேலும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கிலீனிங், கேட்டரிங், லொன்றி போன்ற பிரிவுக்கு வேலை யாட்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். கட்டட நிர்மாணத் துறையில் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ள லாம். மேசன், பெயின்டர், டயில்ஸ் கையுதவியாட்கள். சம்பளம் 18,000-48,000 வரை வயது 17-55 உணவு தங்கு மிடம் இலவசத்துடன் இலங்கையில் எல்லாப் பகுதிகளி லும் பதிவுகள் நடைபெறும் தொடர்புக்கு 0770734757.

---

தற்போது நீர்கொழும்பில் ஆண்,பெண் இருபாலா ருக்கும் ஏராளமான வேலை வாய்ப்புக்கள், தங்கி வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண்கள், பாதை கள், நன்கு அனுபவமுள்ள Drivers, Hotel boys,room boys, cooks, காவலாளி, Couples, Gardners, Baby Sitters. வயதெல்லை 20-60 சம்பளம் 20.000-30,000 உணவு தங்குமிட வசதி இலவசம் தொடர்புக்கு 0314938485, 0770133002.

---

வடகிழக்கு, ஊவா,சப்ரகமுவ, வடமேல் மற்றும் கொழும்பை அண்மித்தவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு 17-50 தமிழ், முஸ்லிம் இணைத்துக் கொள்ளப் படுவீர்கள். ஜேம் கோடியல், பால்மா, வாசனைதிரவியங் கள். விளையாட்டுப்பொருட்கள் போன்ற தயாரிப்பு, பொதி யிடல், Loading,unioading பிரிவுகளுக்கும் மற்றும் துறைமுகம், (தனியார்), Construction side,Security பணிப் பெண்களுக்கும் வெற்றிடம், உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும். சம்பளம் 18,000-28,000-45,000 (நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் எமது காரியால யம் உண்டு) உடன் தொடர்புக்கு 0778430179 கொழும்பு.

---

கண்டியில் தனிமையில் வசிக்கும் எனது தாயாருடன் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 20 வயதிற்கு மேற்பட்ட நம்பிக்கையான பணிப்பெண் ஒருவர் தேவை. (வீட்டில்) ஒருவரைப் போல இருப்பதற்கு) 0814945224, 0772138364.

---

இஸ்லாமிய மார்க்கப்பற்றுடைய 20 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண்தேவை. நாங்கள் வெளிநாடு செல்லவிருப்பதால் எனது தாயாருடன் 12 வயது பிள்ளையை பார்த்துக் கொண்டிருப்பதற்கு (குடும்பத்தில் ஒருவரைப்போல் பராமரிக்கப்படுவர்), தொடர்புக்கு 0113053387, 072 7944586.

---

தங்கி வேலை செய்யக்கூடிய வீட்டு பணிப்பெண்கள் தேவை. சம்பளம் 12,000-15,000 ரூபா முற்பணம் 3000 ரூபா வழங்கப்படும். தோட்ட வேலைக்கு ஆண்கள் தம்பதியினர்கள் ஆட்டோ சாரதியும் தேவை. 0772444817.

---

ஆயுர்வேத மத்திய நிலையத்திற்கு பயிற்சி பெற்ற பயிற்சி அற்ற 18 தொடக்கம் 28 வயதிற்குட்பட்ட பெண்கள் வேலைக்குத் தேவை. சம்பளம் மாதம் 60,000இற்கு மேல் சம்பாதிக்கலாம். உணவு, தங்குமிடம் இலவசம் Heda weda medura, 159, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு 15, தொடர்புக்கு 0113021370, 0726544020, 0783867137.

---

காபன் உற்பத்தி தொழிற்சாலைக்கு ஊழியர்கள் தேவை. வயது 18-55 உணவு, தங்குமிடம் உண்டு சம்பளம் நாள் ஒன்றுக்கு 1000,-1400-2000 மாதாந்தம் 25,000,43,500 56,000 பெற்றுக்கொள்ள முடியும். தேசிய அடையாள அட்டையுடன் வருகை தரவும், கட்டண அறவீடு இல்லை 0719797702, 0770866468,0719797708.

# மோடியின் வருகையால் இந்தியாவின் பலம் அதிகரிக்கும்

## இப்படிச் சொல்கிறது பொதுபலசேன

(கொழும்பு)

இந்தியப் பிரதமராக மோடி தெரிவுசெய்யப்பட்டமையால் எதிர்காலத்தில் ஆசியாவில் இந்தியாவில் சொல்வாக்கும் பலமும் மேலும் அதிகரிக்கும் என்று பொதுபலசேன கருத்து வெளியிடடுள்ளது. இந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே கருந்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி தெரிவானமைக்கு பொதுபலசேன தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது.

பொதுபலசேனவின் சிரேஷட நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே இந்த மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.

மோடியின் வெற்றி இந்தியாவின் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாது. எனினும உலக மற்றும் ஆசிய வலய அரசியலில் செல்வாக்கை ஏற்படுத்தும்.இந்தநிலையில் மோடி, பிராந்தியத்தில் இருந்து தீவிரவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் தோற்கடிப்பார் என்று பொதுபலசேனவின் அதிகாரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நரேந்திர மோடியின் வெற்றி பிராந்தியத்தில் இருளை ஏற்படுத்தும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வெளியிட்டுள்ள கருத்தைக் கண்டித்துள்ள விதானகே, வாசுதேவ போன்றவர்கள் முட்டாள்தனமான அறிக்கைகளை வெளியிட்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

# பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி 2276 பொலிஸ் அலுவலர்கள் நியமனம்

(யாழ்.நிருபர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேர்ச்சி பெற்ற 2276 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய மொழிகள் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் மொழியில் பேச எழுத நன்கு தேர்ச்சி பெற்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீதம் நியமிக்கப்பவுள்ளதாகவும் வடக்கு மாகாணத்தில் 1183 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கிழக்கு மாகாணத்தில் 1093 பொலிஸ் உத்தியோகத்தூர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# கலாசார பீடத்தில் புதிய கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசாரப் பீடத்தின் பட்டப்பின் கற்கை நெறிக்கான முதலாவது தொகுதி மாணவர்களின் கற்கை நெறி ஆரம்ப விழா தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இவ்வைபவத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எச்.அப்துல்சத்தார் உட்பட பீடாதிபதிகள், விரிவுரையாளர், உத்தியோகத்தர்கள் எனப்பலரு கலந்துகொள்வர். (10)

# இந்திய மீனவர் விவகாரம் பேச்சுக்கள் மேலும் தொடரும்

## அரசு அறிவிப்பு



(கொழும்பு)

மீனவர் பிரச்சினை குறித்து இந்தியாவுடனான பேச்சுவார்த்தைகள் தொடரும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. ஏற்கனவே இணங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தலில் எந்தக் கட்சி வெற்றியீட்டினாலும் பேச்சுவார்த்தைகளை தொடர்வதென கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இரு மீனவ சமூகங்களுக்குகிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இணக்கப்பாடு எட்டப்படாவிட்டாலும், தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபட இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்ததாகவும் அதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கவில்லை எனவும மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் டி.எம்.ஆர். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# முல்லையில் நூதனசாலை சுற்றுலாப் பயணிகள் படையெடுப்பு

(முல்லைத்தீவு)

முல்லத்தீவு மாவட்டத்தில் ஏ-35 பாதையில் அமைக்கப்பட்ட போர் நூதன்சாலையை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

சுமார் மூன்று ஏக்கர் நிலப் பரப்பில் இந்தப் போர் நூதன சாலை அமைககப்பட்டுள்ளது.

கடந்த 2009 இல் இடம்பெற்ற விடுதலைப்புலிகளுடனான மோதலில் கைப்பற்றப்பட்ட வள்ளங்கள் போர்க்கப்பல்கள் விடுதலைப்புலிகளால் தயாரிக்கப்பட்டு சிதைவடைந்த விமான பாகங்கள் ஆயுதங்கள் செல் மோட்டார்கள், துப்பாக்கிகள், ரவைகள், பசிலன் செல் மோட்டார்கள் எனப் பெரும் திரளான ஆயுதங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் என தினமும் பெருந்திரளானவர்கள் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

இதேவேளை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் படமெடுத்து ஆவணமாக்கி செல்வதை காணக்கூடியதாக உள்ளது.

# “திவிநெகும” கோழி போட்டது இரட்டை முட்டை



திவிநெகும உதவித் திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு வழங்கப்பட்ட கோழி ஒன்று இரட்டை முட்டை போட்டிருக்கிறது.

இரண்டு முட்டைகள் ஒட்டிய நிலையில் காணப்படும் முட்டையை இந்தக் கோழி போட்டுள்ளது. சுமார் 8 சென்ரிமீற்றர் நீளம் உடைய இந்த முட்டையை ஆச்சரியத்துடன் பலர் சென்று பார்வையிட்டிருக்கின்றனர்.

தென்பகுதியில் காலி மாவட்டத்தின் கொஸ்கொட என்ற இடத்தில் உள்ள புஸ்பா என்பவரின் கோழிப்பண்ணையில் வளர்க்கப்பட்டு வந்த கோழியே இந்த அதிசயமான முட்டையை கடந்தவாரம் போட்டிருக்கிறது.

# குரு அம்மா தினம்


(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்தின் குருஅம்மா தினம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய தலைவர் தலைமையில் 32 ஆவது ஆண்டு குரு அம்மா தினமும் விசேட பூசை வழிபாடு, அன்னதானம் பஜனை, வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ மா.பத்மநாதன் விசேட பூசை வழிபாட்டை மேற்கொள்ளவுள்ளார். அன்றைய தினம் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து மக்கள் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திற்கு படையெடுக்கவுள்ளனர்.

வெள்மாவட்டங்களில் இருந்து வரும் பக்தர்களுக்கு தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப் படவுள்ளன. (92)



# பரமர் சங்கமம்

சகட்டு மேனிக்குச் சல்லாபித்தல் எண்டு சொல்லுவினம். இது பழமொழியோ புது மொழியோ கிடையாது. அந்தக் கால இலக்கியக்காரர் உவமானம் எண்டால் அதில புது மெருகூட்டி புதிய படைப்பாளிகள் உவமேயம் என்பினம் அவ்வளவு தான்.

அண்டைக்கொரு நாள் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை வைத்துக்கொண்டு பரமரும் சகட்டு மேனிக்கு உங்களோட சல்லாபிக்கலாம் எண்டு வெளிக்கிட்டன்.

முதலில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் சொன்னது நினைவுக்கு வருகுது. முடிந்த காலாண்டு அட்டவணைப்படி வடபகுதியில் முன்னைய வருடங்களோடை ஒப்பிடேக்கை மீன்பிடி பத்து சதவீதத்தால் அதிகரித்திருகின்றதென அவர் பெருமைப்படுகிறார்.

அதற்கவர் சொல்கின்ற ஒரே உதாரணமும் வலுவில்லாததாக இருக்கிறது. இந்திய இழுவைப் படகுகளை மட்டுப்படுத்தியதே பத்து வீத அதிகரிப்புக்கும் காரணமென்கிறார். அதைவிட அரசால் தடை விதிக்கப்பட்ட தங்கூசி வலையால் பாதிப்புக்குள் ளான தொழில்கள் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை.

மீனவர்களிடம் விசாரித்தால் நூற்றுக்கணக்கான தொழில்கள் கைவிடப்பட்டுள்ளதாகக் கூறுவர். எது எப்படியெண்டாலும் கடலுணவு வாங்கப் போனால் சந்தைகளில் மீன், றால், நண்டு கணவாய் என்பன அருந்தலாகவே காணப்படுகிறது.

விலைகள் சாதாரண மக்கள்ால் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு இருக்கும் அப்புடியெண்டால் பத்துவீதம் அதிகரித்த கடலுணவுகள் எங்கே போகின்றன? இப்புடிக் கேக்க வேண்டியதாய் இருக்குதெல்லே.

இன்னொண்டு பொத்துகர ரயில் விபத்தில் சிக்கக் காரணம் உதவி ரயில்வே கண்காணிப்பாளர் இல்லாமையும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட எஸ்–II வகையைச் சேர்ந்த இயந்திரமுமம் என அகில இலங்கை ரயில்வே பொது ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


அக்கூற்றை வலுப்படுத்த எஸ்–II என்ஜின் இடைநடுவில் நின்றுவிடும் சாத்தியம் இருப்பதாவும் , நம்நாட்டுப் பயணங்களுக்கு பொருத்தம் அற்றவையென சாரதிகள் சுட்டிக் காட்டி இருந்ததாகவும் 12 பெட்டிகளுடன் உதவிக் கண்காணிப்பாளர் இல்லாமல் அதிகவே இன்ரசிற்றி ரயிலை அதிகாரிகள் எவ்விதம் அனுமதித்தார்களென்றால் ஆதாரங்களை சங்கம் முன்வைத்துமிருக்கிறது.

இப்புடிப் பாத்தால் ஒண்டுமே ஒழுங்காக நடப்பதில்லை இவ்வாறு ஏதும் நடந்தாலே பிறகுதான் சரிபிழை கதைக்கிறேண்டு விளங்குதில்லே நேருக்கு நேர் ஓடிக்கொண்டிருக்கேக்க மோதினேண்டது பிழை நிறுத்தி இருந்த ஒன்றுடனே மற்றொன்று ஓடிவந்து மோதியிருக்கு.

இதைப்போலவே சமீபத்தில் கப்பலொண்டு மூழ்கி அனர்த்தத்தைக் கண்ட தென்கொரியாவிலும் இரு ரயில் மோதிய செய்தி ரஜீவ்காந்திக்கு மட்டுமே தான் மகள் எண்டு பிரி யங்கா கூறியது. சோனியா இந்திய மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமெண்டதுக்கு நரேந்திர மோடி கடந்த இருபத்தைந்து வருடங்களாகக் கடவுளையே சிந்திக்கக் காங்கிரஸீக்கு நெருக்கடிதான் காரணமெண்ட சல்லடாங்கள் ளெல்லாம் ஒரே நாள் பத்திரிகைகளில் சகட்டு மேனிக்கு வெளிவந்துள்ளதைப் பாத்தால் உங்களுக்கு எப்புடி இருக்கு சொல்லுங்க பாப்பம்...

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான விஞ்ஞான பாட பயிற்சிகள் - 2014

1) அங்கியொன்றின் எல்லா உயிர்ப்பண்புகளையும், இயல்புகளையும் வெளிக்காட்டும் மிகச்சிறிய அலகே கலங்கள் ஆகும்.




உரு X, Y ஐ இனம் காண்க

x : ........................ Y : ........................

பின்வரும் பகுதிகளைப் பெயரிடுக

A : ........................ D : ........................

B: ........................ E : ........................

C :........................ F : ........................

உரு Y ஆனது X இருந்து வேறுபடும் இரு இயல்புகள்

அ) ........................ கொண்டிருத்தல்.

ஆ) ........................ கொண்டிருத்தல்.

கலத்தின் முக்கிய பகுதியாகவும், கட்டுப்பாட்டு மையமாகவும் தொழிற்படுவது ........................ ஆகும். கருவினுள் காணப்படும் ........................ எனும் அமைப்புகள் அங்கிகளின் சிறப்பான பண்புகளைத் தீர்மானிக்கும் ........................ கொண்டுள்ளன.

முதலுருவினுள் உள்ள மற்றொரு புன்னங்கம் ........................ ஆகும். கலச்சுவாசம் நிகழும் தானம் இதுவாகும்.

2) ஒரு தொழிலையோ ........................ தொழில்களையோ நிறைவேற்றவென சிறந்தலடைந்த ........................ இழையம் எனப்படும். ........................ , ........................ என்பன தாவர இழையங்களாகும். பாய. நிலையிலுள்ள இழையம் ........................ ஆகும்.

| இழையம் | தொழில் |
|---|---|
| 1) மேற்றோல் | 1) ........................ |
| 2) குருதி | 2) ........................ |
| 3) தசை | 3) ........................ |
| 4) நரம்பிழையம் | 4) ........................ |

குருதியின் கூறுகள் ........................ , ........................ , ........................ , ........................ என்பனவாகும்.

3) ........................ தேகமெங்கும் பரவிக் காணப்படும். சூழல் பற்றிய அறிவைப் பெறவும், அதற்கேற்ப துலங்கலைக் காட்டவும் ........................ உதவுகின்றது. ........................ களும் ........................ வும் கூட்டாக ........................ ஆக்கியுள்ளன.

நரம்புத்தொகுதி ........................ , ........................ என இரு பகுதிகளைக் கொண்டது. நரம்புகளில் ........................ , ........................ , ........................ என மூவகையுண்டு. ஒவ்வொரு நரம்புக் கலமும் ........................ யும் அதிலிருந்து பரவும் ........................ யும் கொண்டது. நீளமான நரம்புமுனை ........................ எனவும் குறுகிய நரம்புமுனை ........................ எனவும் அழைக்கப்படும்.

4) உடலினுள் நிகழும் அசைவுகள் ........................ களினாலேயே ஏற்படுகின்றன. மூன்று வகையான தசையிழையங்கள் உள்ளன.
1) ........................ 2) ........................
3) ........................ சிறத்தல் குறைவான எளிய தசை ........................ ஆகும். ........................ , ........................ போன்ற உறுப்புகளில் மழமழப்பான தசை காணப்படும். என்புகளுடன் இணைந்துள்ள தசைகள் எ எனப்படும். ........................ , ........................, ........................ போன்ற பாகங்களில் இவை காணப்படும்.

இத்தசைகள் ........................ இயங்குவதில் ........................ தசையையும் ........................ கொண்டிருத்தலில் ........................ தசையையும் ஒத்தது. ........................ கொண்டிருத்ததில் இவ்விரு தசைகளிலுமிருந்து வேறுபடும்.

5) தாவரத்தின் சகல பகுதிகளையும் போர்த்தியுள்ள இழையம் ........................ இழையமாகும். ........................ , ........................ , ........................ என்பவற்றிலிருந்து அக இழையங்களைப் பாதுகாப்பது இதன் தொழிலாகும். நீரில் மிதக்கும் இலைகளில் மேற்புற மேற்றோலிலேயே ........................ , ........................ உண்டு.

வேரின் மேற்றோல் கலங்களிலிருந்து உருவானவை ........................ ஆகும். இதனூடாகவே தாவரத்திற்குத் தேவையான நீரும் கனியுப்புகளும் அகத்துறிஞ்சப்படும்.

6) ........................ கூடிய இடத்திலிருந்து ........................ , ........................ இடத்திற்கு திண்ம, திரவ, வாயுத் ........................ அசைந்த செல்லல் ........................ எனப்படும். குறித்த சில பதார்த்தங்களை மட்டும் ........................ மென்சவ்வு ........................ மென்சவ்வு எனப்படும்.

........................ மென்சவ்வினூடாக ........................ கூடிய பகுதியிலிருந்து ........................ குறைந்த பகுதிக்கு கரைப்பான் துணிக்கைகள் பரவுதல் ........................ எனப்படும். இழையங்களினுள் ........................ உட்புகுதல் ........................ பிரசாரணமெனவும், இழையங்களிலிருந்து ........................ புறப் ........................ எனவும் அழைக்கப்படும்.

பரவலுக்கு ........................ கலமென்சவ்வினூடாக ........................ புகுதல் ........................ ,........................ எனப்படும்.

1) மனித உடலில் பதார்த்தங்களைக் கொண்டுசெல்ல உதவும் ஊடகம் ........................ ஆகும்.

குருதி வங்கிகளில் குருதி உறையாது தடுக்க ........................ அல்லது ........................ போன்ற ஒரு பதார்த்தம் சேர்க்கப்படும்.

இரட்டைக் குழிவான கருவற்ற ஈமோகுளோபின் கொண்ட குருதிக்கலம் ........................ ஆகும். அளவில் பெரிய கரு உடைய ஒழுங்கற்ற வடிவமுடையவை ........................ ஆகும். கருவற்ற சிறிய துணிக்கைகள் ........................ எனப்படும்.

இதயம் 4 அறைகளைக் கொண்டது. இடது சோணையறைக்கும், இதயவறைக்குமிடையே ........................ அமைந்துள்ளது. வலது சோணையறைக்கும் இதயவறைக்குமிடையே ........................ அமைந்துள்ளது. இவ்வால்புகளினால் ........................ புகும் குருதி மீண்டும் ........................ புகுவது தடுக்கப்படும். ஒப்பீட்டளவில் ........................ இதயவறைச் சுவரே அதிக ........................

இதயத்தை ........................ குருதியைக் கொண்டு செல்லும் கலன்கள் ........................ எனவும் இதயத்திலிருந்து குருதியை ........................ கொண்டு செல்பவை நாளங்கள் எனவும் அழைக்கப்படும். சோணையறைகள் சுருங்கும்போது ........................ , ........................ வால்புகள் ........................ இதய அறைகள் சுருங்கும்போது ........................ , ........................ வால்புகள் மூடப்பட ........................ வால்புகள் திறக்கும்.

2) குருதிக்கலன்களினுள் உள்ள ........................ யினால் ........................ சுவர்களின் மீது பிரயோகிக்கப்படும் அமுக்கமே ........................ எனப்படும். மருத்துவத் தேவைகளின்போது குருதியமுக்கம் B.P ........................ mm Hg என காட்டப்படும்.

........................ இதயம் சுருங்கி ........................ இதயத் ........................ எனப்படும். ........................ வீதத்தைக் கட்டுப்படுத்துவது ........................ ஆகும். இது ........................ சுவரில் ........................ திறக்குமிடத்திற்கு ........................ அமைந்துள்ளது.

உடலெங்கும் குருதியை விநியோகிக்க ........................ , ........................ , ........................ எனும் மூவகைக் குருதிக்கலன்கள் உதவுகின்றன. உடலின் சகல பகுதிகட்கும் ........................ விநியோகிக்கப்படுவதற்காக இதயத்தினூடாக ........................ செல்வதால் இது ........................ எனப்படும்.

கலங்களுக்கும் குருதிக்குமிடையே ........................, ........................ செயற்பாடு ........................ பாயத்தினூடாகவே நிகழும்.

3) ஒருவருடைய குருதியை வேறொருவருக்குப் பாய்ச்சுதல் ........................ ........................ எனப்படும். ........................ ........................ என்பவர் ........................ வகை குருதியினங்கள் உள்ளன எனக் கண்டறிந்தார். அவ்வகைகள் ........................ , ........................ ,........................ , ........................ என்பனவாகும். குருதியை ........................ உம் ........................ உம் ஒரே குருதி ........................ சேர்ந்தவராயமைதல் வேண்டும். ........................ இனத்தைச் சேர்ந்தவர்கள் பொது வாங்கி எனவும் ........................ இனத்தைச் சேர்ந்தவர் ........................ எனவும் அழைக்கப்படுவர்.

4) குருதியிலுள்ள .......................................... அளவு குறைவடைதல் .......................................... எனப்படும். அதிக .......................................... , .......................................... போன்றவை இந்நோய் நிலைக்கான காரணிகளாகும். உணவில் .......................................... , .......................................... ஆகியன குறைவடைவதால் .......................................... உற்பத்தி பாதிக்கப்படும்.

குருதியில் .......................................... அசாதாரணமாக .......................................... லியூக்கேமியாவாகும்.

குருதியில் குருதி உறைதலுக்கான காரணியின்மையால் ஏற்படும் நோய் .......................................... ஆகும். இது ஒரு .......................................... நோயாகும்.

குருதியில் குருதி உறைதலுக்கான காரணியின்மையால் ஏற்படும் நோய் .......................................... ஆகும். இது ஒரு .......................................... நோயாகும்.

குருதிக் கலன்களினுள் குருதிக்கட்டி சிறைப்படுவதால் உடற்பகுதிகளின் தொழிற்பாடு பாதிக்கப்படல் .......................................... ஆகும்.

5) நிணநீர் பாயம், .......................................... அற்ற குருதித் திரவவிழையத்தின் கட்டமைப்பை ஒத்தது. உடலெங்கும் உள்ள நிணநீர் கான்கள் ஒன்று சேர்ந்து .......................................... எனுமிரு பிரதான கான்களை உருவாக்கும். அவை மீண்டும் முறையே .......................................... , .......................................... எனுமிரு நாளங்களினுள் திறக்கின்றன.

தசைகள் .......................................... ஏற்படும் அமுக்கத்தினாலும் .......................................... , .......................................... பொறிமுறையின் போதான உறிஞ்சற் செயற்பாட்டினாலுமே நிணநீர்பாயம் இதயத்தை நோக்கிச் செலுத்தப்படும். நிணநீர்கான்களில் .......................................... , .......................................... , .......................................... ஆகிய இடங்களில் நிணநீர் .......................................... அமைந்துள்ளன.

உடலினுள் புகும் நோய்க்கிருமிகளைக் கட்டுப்படுத்துவதில் .......................................... பெரும் பங்காற்றுகின்றது.

1) அங்கிகள் .......................................... மாற்றங்களுக்கேற்ப .......................................... களைக் காட்டும் .......................................... , .......................................... , .......................................... , .......................................... போன்றவை உணர்வுகளை அறிய உதவும். .......................................... ஆகும். அங்கியொன்றில் .......................................... ஏற்படுத்தக்கூடிய .......................................... தூண்டல் எனப்படும். .......................................... காட்டப்படும்போது .......................................... எனப்படும். .......................................... தூண்டல்களுக்கு .......................................... காட்டும் உடற்பகுதிகள் .......................................... எனப்படும்.

எமது உடற்பகுதிகள் .......................................... எனப்படும். எமது உடலிலுள்ள விளைவு காட்டிகள் .......................................... , .......................................... ஆகும்.

தூண்டல் .......................................... செயற்பாட்டில் .......................................... விளைவு காட்டிக்குமிடையே தொடர்பேற்பது .......................................... ஆகும்.

2) நரம்புத்தொகுதியானது .......................................... , .......................................... என இரு பகுதிகளைக் கொண்டது. நரம்பிழையத்தின் ஆக்க அலகு .......................................... ஆகும். புலன் நரம்புக்கலம் நீளமான .......................................... யையும் இயக்க நரம்புக் கலம் நீளமான .......................................... யையும் கொண்டிருக்கும்.

மூளை ..........................................மென்சவ்வுகளால் மூடப்பட்டு என்பினால் ஆன .......................................... உள்ளது. மூளைய மென்சவ்வுகளாவன .......................................... , .......................................... , .......................................... என்பனவாகும். மூளையானது .......................................... , .......................................... , .......................................... எனும் மூன்று பகுதிகளாலானது. மூளையத்தின் தொழில்களாவன,

1) ..........................................

2) ..........................................

3) .......................................... என்பனவாகும்.

மூளியானது உடலின் .......................................... இயக்கத்தில் பங்குகொள்ளும் .......................................... ஒருங்கிசைந்து .......................................... ஏற்படுத்தும் நீள்வளைய மையவிழையம், இதயத்துடிப்பு, .......................................... போன்ற செயல்களைக் கட்டுப்படுத்தும்.

தூண்டல்களுக்கு .......................................... காட்டப்படும் துலங்கல்களே .......................................... எனப்படும். தூண்டலின் பின் .......................................... துலங்கல் காட்டப்படுவதே இதன் சிறப்பியல்பாகும். தெறிவினையின் போது .......................................... இருந்து .......................................... வரை கணத்தாக்கம் .......................................... பாதை .......................................... எனப்படும். .......................................... தெறிவினை, .......................................... தெறிவினை என்பன இருவகைத் தெறிவினைகளாகும். .......................................... சுருங்குதல், .......................................... , .......................................... , .......................................... என்பன தெறிவினைகளாகும்.

3) பல்வேறு .......................................... சீராக நிறைவேற்றவென உறுப்புகள் அல்லது தொகுதிகள் .......................................... தொழிற்படல் .......................................... எனப்படும். .......................................... , .......................................... என் இரு வகையுண்டு.

புலனுறுப்புகளுள் கண் முக்கியத்துவம் வாய்ந்தது. கண்ணீர்ச் சுரப்பிகளினால் சுரக்கப்படும் .......................................... மூலம்

1) ..........................................

2) ..........................................

மேலதிக கண்ணீர் .......................................... யினுள் செலுத்தப்படும். .......................................... , .......................................... , .......................................... எனும் மூன்று படைகள் கண்ணில் அமைந்துள்ளன. போசனையை வழங்குவது .......................................... ஆகும். கண்ணினுள் புகும் ஒளியினளவைக் கட்டுப்படுத்துவது .......................................... ஆகும். விழித்திரையில் .......................................... , .......................................... எனுமிரு வகைக் கலங்கள் உண்டு. மஞ்சள் பொட்டில் .......................................... மட்டுமே காணப்படும். விழித்திரையில் தோற்றுவிக்கப்படும் விம்பம் .......................................... , .......................................... விம்பமாகும்.

4) காதுச்சோணையின் .......................................... அமைந்துள்ள .......................................... காதாகும். இது .......................................... , .......................................... , .......................................... எனப் பிரிக்கப்பட்டுள்ளது. உட்செவியும் .......................................... யும் .......................................... என்பினால் ஆன .......................................... அமைந்துள்ளன. செவிப்பறையால் பெறப்படும் .......................................... விரியலாக்குவதே .......................................... களின் தொழிலாகும். நடுச்செவியினுள் உள்ள அமுக்கத்தை .......................................... அமுக்கத்திற்கு .......................................... பேணுதல் .......................................... ஆகும். .......................................... கால்வாயினுட்பகுதியிலேயே .......................................... கலங்கள் காணப்படும். காதில் உள்ள .......................................... உடன் தொடர்பற்ற .......................................... பேண உதவுவது .......................................... உபகரணமாகும்

5) மூக்குக் குழியின் .......................................... அமைந்துள்ள .......................................... கலங்கள் .......................................... வாங்கியாகத் தொழிற்படுகின்றன. இவை.......................................... நரம்புக்கலங்களாகும். மணத்தின் .......................................... தொடக்கப் பெறுமானம் மிகக்குறைவாகும். எளிதில் .......................................... பதார்த்தங்களால் .......................................... கலங்கள் தூண்டப்பட்டு மண நுகர்ச்சி .......................................... ஊடாக மூளைக்குக் ..........................................

நாக்கினால் உணரக்கூடிய அடிப்படைச் சுவைகள் .......................................... , .......................................... , .......................................... , .......................................... என்பனவாகும். நாவின் .......................................... பகுதிகளில் வெவ்வேறு .......................................... உணரப்படும். நாக்கின் மேற்பரப்பில் .......................................... காணப்படும். இவை தூண்டப்படுவதனாலேயே சுவை உணரப்படும்.

உடலில் கவசமாய் அமையும் இழையம் .......................................... ஆகும். .......................................... , .......................................... , .......................................... , .......................................... ஆகிய 5 வகை உணர்வுகளையும் வாங்கும் தன்மை .......................................... இற்கு உண்டு.


6) .......................................... எனப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாகவே .......................................... நிகழ்கின்றது. அகஞ்சுரக்கும் சுரப்பிகளினால் .......................................... சுரக்கப்படுகின்றன. இவை நேரடியாகவே .......................................... சேர்க்கப்படுவதால் இச் சுரப்பிகள் .......................................... சுரப்பிகளெனப்படும்.

கபச்சுரப்பியினால் .......................................... (STH) எனப்படும் .......................................... ஓமோன் சுரக்கப்படுகின்றது. ஆபத்தான சந்தர்ப்பங்களில் செயற்படுவதற்காக .......................................... செய்தல், .......................................... சுரப்பியால் சுரக்கப்படும் அதிரீனலின் ஆகும். குருதியிலுள்ள .......................................... மட்டத்தை மாறாது பேண உதவுவது .......................................... களால் சுரக்கப்படும் .......................................... ஆகும். .......................................... ஆண்களின் துணைப்பாலியல்புகளுக்கும் .......................................... பெண்களின் துணைப்பாலியல்புகளுக்கும் காரணமாயமையும் .......................................... குறைபாட்டினால் .......................................... குறைவாகச் சுரக்கப்படலே .......................................... க்குக் காரணமாகும். மலைப்பிரதேச மக்களிடையே இது பரவலாகக் காணப்படுவதற்கு மண்ணிலுள்ள .......................................... மண்ணரிப்பால் கழுவிச் செல்லப்படுவதே காரணமாகும்.

7) எமது புறச்சூழல் .......................................... ஆகும். எமது உடல் .......................................... சூழ அமைந்த .......................................... உம் குருதிக் கலன்களைச் சூழ அமைந்துள்ள .......................................... உடலின் .......................................... ஆகும். குருதி மயிர்க்குழாய்களிலிருந்து வெளியே பரவிய .......................................... அற்ற .......................................... இழையப் பாயமெனப்படும்.

.......................................... மாறாது பேணுதல் .......................................... எனப்படும். மனித உடலின் சகல உயிர் .......................................... சீராக நிகழும் வெப்பநிலை .......................................... °C ஆகும். வெப்பநிலைச் சீராக்கத்தில் பங்கெடுக்கும் ஓமோன் .......................................... ஆகும். வெப்பநிலை குறையும்போது, இதயத்துடிப்பை அதிகரித்தல், .......................................... நுரையீரல்களின் .......................................... களை .......................................... செய்தல் போன்றன .......................................... இன் தொழிற்பாடாகும்.

சுகதேகி ஒருவரின் குருதியின் சராசரி குளுக்கோசுச் செறிவு .......................................... mm/100ml ஆகும். குருதியில் குளுக்கோசுச் செறிவைச் சீராகப் பேண உதவுவது .......................................... ஆகும். .......................................... யினால் சுரக்கப்படும் .......................................... ஓமோனே உடலின் நீர் சமநிலையைப் பேண உதவும். அன்றாட வாழ்வில் ஒரு சீர் திடநிலையை சீராகப் பேண உதவும் வழிவகைகள் கொண்ட வாழ்க்கைக் கோலமொன்றை ஏற்படுத்திக்கொள்ளல் அவசியமானதாகும்.




கொற்றாவத்தை அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் சிரேஷ்ட மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி வழங்கல் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமராட்சி கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வரவேற்கப்படுவதையும், மாணவனுக்கு பிரதம விருந்தினர் கழுத்துப்பட்டி அணிவிப்பதையும், கலந்துகொண்ட மாணவர்களையும் காணலாம். (116)

# மோடியின் பார்வையில் மகிந்த தேவநம்பியதீஸனா? இராவணனா?

## வெளியுறவுக் கொள்கையில் மறுசீரமைப்பு அவசியம்





(கொழும்பு)

புதிய இந்திய பிரதமராக தெரிவாகியிருக்கும் மோடியின் பார்வையில் இலங்கையில் தற்போது ஆட்சி புரிபவர் தேவநம்பியதீஸனா அல்லது இராவணனா? என்ற இராஜதந்திர ரீதியிலான கேள்வி எழுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாக முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இடையே பெரியளவில் ந...முறை சித்தாந்தங்களில் வேறுபாடுகள் இருக்காது என்றும் முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக்க கூறினார்.

ஒத்த எண்ணம் கொண்ட, தேசியவாத, வெகுஜன மக்களை வசப்படுத்தும் கொள்கை கொணட ஒருவர் முக்கிய அண்டை நாடான இந்தியாவின் பிரதமராவதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவேற்கிறார் என்றும் விபரித்தார்.

ராஜபக்ஷ ஆட்சியின் சித்தாதங்களை மதச்சார்பற்ற காங்கிரஸ் அரசாங்கத்தை விட, பா.ஜக. ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வார்கள் என்கின்ற நம்பிக்கை மகிந்த ராஜபக்ஷவின் வட்டாரங்களிடம் காணப்படுவதாகவும் தயான் சுட்டிக்காட்டினார்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ எந்த பாத்திரத்தை வகிக்கப் போகிறார் என்பதைப் பொறுத்தே நரேந்திர மோடியுடனான உறவு அமையும் என்றும் கூறினார் தயான் ஜயதிலக்க, பௌத்தத்தை இலங்கைக்கு அனுப்பிய அசோகச் சக்கரவர்த்தியின் மென்மையான சக்தியை இணங்கி உள்வாங்கிக் கொண்ட இலங்கை மன்னன் தேவநம்பிய தீஸனின் பாத்திரமா அல்லது பா.ஜ.க.வினர் நம்புகின்ற இராமாயணம் கூறுகின்ற இராவணனின் பாத்திரமா என்ற இரண்டு தெரிவுகளும் மகிந்தவிடமே உள்ளன என்றார் தயான்.

இலங்கைத் தமிழர்களின் தீர்வு விடயத்திலோ அல்லது பாகிஸ்தானுடனான இலங்கையின் பாதுகாப்பு உறவுகள் குறித்து இந்தியாவுக்கு இருக்கின்ற கலக்கங்கள் குறித்தோ ராஜபக்ஷ தயக்கம் காட்டினால், அதற்கான விலையை அவரே கொடுக்க நேரிடும் என்றும் முன்னாள் இராஜதந்திரி தயான் சுட்டிக்காட்டினார்.

மோடியின் பா.ஜ.க. ஆட்சி, மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கத்தைப் போலவோ வாஜ்பாய் தலைமையிலான பழைய பா.ஜ.க. அரசாங்கத்தைப் போலவோ பொறுமையைக் கடைப்பிடிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் கூறினார்.

# புதிய நிர்வாகத்தெரிவு

பொலிகண்டி கந்தவனக் கடவை முருகப்பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவம் அடுத்தமாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளதால் அதன் முன்னேற்பாடாக இரண்டாம் திருவிழா உபயகாரர்களின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் கடந்த வியாழக்கிழமை ஆலய முன் மண்டபத்தில் நடைபெறறது.

தலைவர் சி.இராஜதுரை தலைமையில் இடம்பெற்ற இப் பொதுக்கூட்டத்தில் 26 மேற்பட்ட 2 ஆம் திருவிழா உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகம் செய்யப்பட்டது. இதில் தலைவராக க.தங்கவேலாயுதம், உப தலைவராக குழந்தைவடி வேல் செயலாளராக பொ.உதய குமார் உபசெயலாளராக ஆ.சிவபால சுந்தரம் பொருளாளராக வீ.சிவ ஞாசேகரம் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக இ.சிவலிங்கம்த.செல்வநாதன் செ.பாலவர்ணன் க.விசிந்தன், த.லிங்கதாஸ், க.முருகதாஸ், க.கந்தசாமி, தி.முருகமூர்த்தி, செ.பாக்கியநாதன் சி.இராஜதுரை சி.கணேசலிங்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (116)

# மஹோற்சவம்

(கொடிகாமம்)

கைதடி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

உற்சவ தினங்களில் தெய்வீக சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளதுடன் தெய்வீக சொற்பொழிவை திருமதி வசந்தா வைத்தியநாதசர்மா ஆற்றவுள்ளார். (14)

# இரணைமடு அபிவிருத்தி நிதி 1988 இல் பயன்படுத்தப்படவில்லை

## நீர் கொள்வனவு குறைவுக்கு இதுவே காரணம் என்கிறார் பொறியியலாளர்

(கிளிநொச்சி)

இரணைமடுக் குளத்தின் உட்கட்டுமான அபிவிருத்திக்காக 1988 ஆம் ஆண்டில ஒதுக்கப்படட 320 மில்லியன் ரூபா கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படவில்லை.

இதனாலேயே இரண்ணமடுக் குளம் மேலதிக நீரைத் தேக்க முடியாத நிலையில் உள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபை தலைமை அலுவலகப் பொறியியலாளர் ஜி.கே. கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயமாக பொறியியலாளர் மேலும் தெரிவிக்கையில்,

எம்.ஐ.ஆர்.பி (MIRP) என்ற செயற்றிட்டத்தின் கீழ் 1988 ஆம் ஆண்டில் இரணைமடு குளத்தின் அபிவிருத்திக்காக 320 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும் பல ஆண்டுகள் இந்த அபிவிருத்திச் செயற்றிட்டம் அமுல் செய்யப்படாத நிலையில் மேற்படி நிதி வேறு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு கொண்டு செல்ல்ப்பட்டது.

இதேபோன்ற நிலையை தடுக்க தற்போது யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 2300 கோடி ரூபாவைப் பயன்படுத்தி தாமதமின்றி ஒருங்கிணைந்த திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான ஓர் நடவடிக்கை மூலமே பாரிய அபிவிருத்திகளை வடக்கில் முன்னெடுக்கலாம்.

தற்போது "இபாட்" (IFAD) நிதி ஒதுக்கீட்டின் கீழ் 4200 மில்லியன் ரூபா திட்டத்தில் இரணைமடு கீழ்த்தள வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலதிக நிதி வரவழைப்பது தொடர்பில் தேசிய நீர் வழங்கல் அமைச்சு மட்டத்தில் ஆலோசனை நடைபெற்று வருவதாக பொறியியலாளர் மேலும் தெரிவித்தார். (92)


## வாழ்க வளமுடன்

பெயர் : தி.காவுஜா
முகவரி : நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

அகவை 7 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்


# "இந்து நாகரிகம்" பாடநூல் வெளியீட்டு விழா

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை இந்துமாமன்ற கல்விக் குழுவால் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பாடத்திட்டத்திற்கு அமைவாக தயா ரிக்கப்பட்டுள்ள "இந்து நாகரிகம்" என்ற பாடநூல் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.என்.கிருஷ்ணவேணி ஆய்வுரை நிகழ்த்துவார்.

இந்து சமய ஆர்வலர்களும், குறித்த பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அன்றையதினம் குறித்த நூல் சலுகை விலையாக 300 ரூபாவுக்கு வழங்கப்படுமென்றும் இந்து மாமன்றக் கல்விக் குழுவின் செயலாளர் த.மனோகரன் தெரிவித்துள்ளார். (10)

## நைஜீரியாவில் மாணவிகள் கடத்தல் எதிரொலி;
# 200 தீவிரவாதிகளை பழிவாங்கினர் கிராம மக்கள்



கடந்த மாதம் 300 பள்ளி மாணவிகளைக் கடத்திச் சென்ற தீவிரவாத கும்பலைச் சேர்ந்த 200 தீவிரவாதிகளை நைஜீரிய கிராம மக்கள் வெறித்தனமாக கொன்று குவித்துள்ளனர். பள்ளி மாணவிகள் 300 பேரை போகோ ஹராம் தீவிரவாதிகள் கடத்திச் சென்று சிறை வைத்துள்ளனர். அவர்களை இன்னும் விடுவிக்கவில்லை. மேலும் அவர்களை செக்ஸ் அடிமைகளாக விற்க போவதாக மிரட்டல் விடுத்து வந்தனர். அவர்களை மீட்கும் முயற்சியில் நைஜீரிய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இந்த தீவிரவாதிகள் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் அடிக்கடி நுழைந்து அவர்கள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வந்தனர். இந்நிலையில் நைஜீரியாவிலுள்ள கலால்பஜ் மாவட்டத்திலுள்ள மெனாரி, சான்கயாரி, கராவா ஆகிய 3 கிராமங்களுக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த தீவிரவாதிகள் மக்களை தாக்கியுள்ளனர்.

இதனால் கிராம மக்கள் கொதித்தெழுந்து, அரிவாள், தடி, கற்கள் போன்ற ஆயுதங்களால் தீவிரவாதிகளை எதிர்த்து வெறித்தனமாக தாக்கினர். அவரகளை கற்களால் அடித்தும், அரிவாளால் வெட்டியும் தீயிட்டு கொளுத்தியும் கதறக் கதற கொன்றனர். கிராம மக்களின் இந்த தாக்குதலில் 200 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

## பெண்களை மதிக்கும் மனப்பான்மை தலைவர்களிடத்தில் அவசியம் தேவை
### ஹிலாரி கிளிண்டன்



பெண்களை மதிக்கும் மனப்பான்மை உலகத் தலைவர்களிடத்தில் தேவை என ஹிலாரி கிளிண்டன் வலியுறுத்தியுள்ளார்.

பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக உலக வங்கி சா்ர்பில் வொஷிங்டனில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் அமெரிக்க முன்னாள் அதிபரும், முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சருமான ஹிலாரி கிளிண்டன் பங்கேற்றார். அப்போது அவர் பெண்களின் கல்வித் தேவை குறித்துப் பேசினார். இது தொடர்பாக அந்நிகழ்ச்சியில் "மேலும் கூறியதாவது,

உலகப்புகழ்பெற்ற ஒக்ஸ்..போர்ட் அல்லது ஹோர்வேர்ட் பல்கலைக்கழகங்களில் தங்களது பெண் குழந்தைகள் கல்வி பயில்வதற்கு சென்றால் பெருமிதம் கொள்ளும் உலக தலைவர்கள், அதற்கு அப்பால் அவர்களது கல்வியை பற்றியோ அவர்களது தேவையை பற்றியோ ஏதும் சிந்திப்பதில்லை. இதன் மூலம் சமூகக் கோட்பாடுகளை உலகத்தலைவர்கள் மதிக்காமல் இருப்பது தெரியவருகிறது.

ஆகவே, தலைவர்கள் தங்களது மகள்களின் கல்விக்கு மட்டுமல்ல, தனது நாட்டின் ஒட்டுமொத்த மகள்களுக்காகவும் சிந்திக்க வேண்டும். பெண்களை மதிக்கும் மனப்பான்மையை உலகத் தலைவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்"என அவர் கோரிக்கை விடுத்தார்.


## இந்தோனேஷியாவில் 6.4 ரிக்டர் நிலநடுக்கம்




இந்தோனேஷியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் மக்கள் சுனாமி பீதியில் ஆழ்ந்துள்ளனர். அசே மாகாணத்தில் பண்டா நகரின் தென்மேற்கில் 319 கிலோ மீற்றர் தொலைவில் நடுக்கடலில் 9 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உருவானது. ரிக்டர் அளவு கோலில் 6.4 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் அசே மாகாணம் சுமத்ரா தீவு பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்குள்ள கட்டடங்கள் கடுமையாக அதிர்ந்ததால் மக்கள் அலறியடித்துக் கொண்டு கட்டடங்களிலிருந்து வெளியேறினர்.

பாதிப்புகள் தொடர்பான முழுமையான தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை. தொடர்ந்து சுமத்ரா தீவுப் பகுதியில் கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் சுனாமி தாக்குதல் நிகழலாம் என்ற பீதியில் மக்கள் அச்சத்துடன் உள்ளனர். எனினும் இந்தோனேஷியா புவியியல் ஆய்வு மையம் சுனாமி அபாயம் ஏதும் இல்லையென்று விளக்கமளித்துள்ளது.


## இந்திய ஜனநாயகம் வெளியானது மோடிக்கு கனடா பிரதமர் வாழ்த்து



(ஒட்டாவா)

இந்தியாவின் சட்டசபை தேர்தலில், வெற்றி பெற்ற, பா.ஜ., கட்சிக்கும், பிரதமராக பொறுப்பேற்கவுள்ள நரேந்திர மோடிக்கும், கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில், தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் நரேந்திர மோடிக்கு, உலக நாடுகளின் தலைவர்கள், தங்கள் வாழ்த்துகளை கூறி வருகின்றனர்.



கனடா நாட்டு பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இரு நாட்டு சமூக மற்றும் பொருளாதார உறவுகள் வளர்ச்சியடைந்து, வெற்றியடைய, புதிய அரசுடன் இணைந்து செயல்பட விரும்புகிறோம். இந்தியாவில், ஏறக்குறைய, 55 கோடி வாக்காளர்கள் அமைதியாக, தங்களுடைய தலைவரை தேர்ந்தெடுத்துள்ளனர். இந்தத் தேர்தலின் மூலம், இந்திய ஜனநாயகத்தின் மக்கள் சக்தி மற்றும் வலிமை வெளியாகியுள்ளது. இந்தியாவின் சுதந்திரமான கலாசாரம், ஜனநாயகம், மனித உரிமை மற்றும் பொ சட்டம் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் ஹார்ப்பர் கூறியுள்ளார்.

### உலகச் செய்திகள்

## புலிகள்....

21ஆம் நூற்றாண்டில் சர்வதேசக் காரணிகள் முக்கியமானவை, அதிலும் அருகில் உள்ள வெளிநாடு. தமிழ் ஈழம் ராஜீவ் காந்தியுடன் மரணித்து விட்டது. ஏனனில் எல்.ரீ.ரீ.ஈ முட்டாள்களால் இந்தியாவின் முக்கியத்தை புரிந்து கொள்ள முடியவில்லை. அன்றைய தினத்தில் ராஜீவ், பிரபாகரன், மற்றும் தமிழ் ஈழம் ஆகிய மூன்றுமே இறந்து விட்டன. இந்த சிறிய தீவில் உள்ள ஒரு குகையில் தடித்துப் பருத்த அரக்கி ஒளிந்திருக்க முடியுமா? கடந்தகால மற்றும் எதிர்கால பிரதமர் ஒருவரை கொலை செய்துவிட்டு அதிலிருந்து தப்ப முடியுமா?

பதின்மூன்றாவது திருத்தத்துக்குப் பின் அந்த அலைகளில் நீந்திச் சென்று சர்வதேச உத்தரவாதத்துடன் கூடிய ஒரு சுயாட்சி அலகினைக் கொண்ட வட கிழக்கு மாகாணசபை நிருவாகத்தை எல்.ரீ.ரீ.ஈ அமைத்திருக்குமானால் இலங்கையின் சரித்திரம் மகிழ்ச்சியாக இருந்திருக்கும் மற்றும் தமிழர்கள் அனுபவித்த இவ்வளவு கஸ்டங்களிலும் இருந்து அவர்கள் காப்பாற்றப் பட்டிருப்பார்கள். ராஜீவ் காந்தியை கொலை செய்ய பிரபாகரன் எடுத்த மடமையான ஒரு முடிவு பிரபாகரனின் மற்றொரு முட்டாள்தன்த்தை பறை சாற்றுகிறது.


1991இல் முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றியது, அது ஒரு குற்றமாக இருப்பதற்கு அப்பால் ஒற்றுமையான தமிழ் தேசத்தை உருவாக்க முயன்றுள்ளார்கள், இது நவீன மாநிலங்களின் பன்முகத்தன்மையை பிடித்துக்கொள்ள தவறிய ஒரு காலத்துக்கு ஒவ்வாத செயலாகும்.

எல்.ரீ.ரீ.ஈ சிதிலமடைந்ததுக்கு மிகவும் முக்கியமான காரணம் அரசியல் சம்பவத்தை மீறிய அதன் இராணுவ சம்பவத்துக்குத் தவறான முன்னுரிமைகளை அளித்ததே ஆகும். அதன் குட்டி முதலாளித்துவம், மார்க்சியம் அல்லாத உயிரணுக்கள். இராணுவமே தவிர அரசியல் அல்ல. இதன் விளைவாக எல்.ரீ.ரீ.ஈ ஒரு இராணுவமாக மற்றும் இராணுவ அமைப்பாக மாறியது அரசியல் அமைப்பாக அல்ல.

சிங்கள அரசாங்கத்தின் கொடூரமான அடக்குமுறைக்கு ஆளாகியிருந்த அந்த இருண்ட மற்றும் துயரமான நாட்களில், எல்.ரீ.ரீ.ஈ தமிழர்களுக்கு ஆதரவாக எழுந்து போராடியது. இதனால்தான் பெரும்பாலான தமிழர்கள் இல்லாவிட்டாலும், இவை அனைத்தும் சில கண்ணீர் துளிகளுடன் முடிந்து விடும் என்கிற சந்தேகம் இருந்தபோதும் பலர் அந்தப் பொடியன்கள் மீது ஒருவித அனுதாபம் கொண்டிருந்தனர். அப்படியே இருந்தாலும் பிரபாகரன் ஒரு லெனினோ, ஒரு மாவோவோ அல்லது ஒரு மண்டலாவோ அல்ல அவர் 1960 களில் பெருவில் இருந்த சைனிங் பாத் கெரில்லாவை போன்றவர்.

எல்.ரீ.ரீ.ஈ ஒரு அரசியல் மூலோபாயத்துக்கு மாறாக கண்டிப்பாக மட்டுப்படுத்தப்பட்ட இராணுவக் கூறுகளை கொண்ட இராணுவத் தீர்வுக்காகவே வாதாடி தொலை தூரக் கடலேரியில் உள்ள முட்டுச் சந்துக்குள் உயிரைவிட்டது. ராஜீவ் காந்தியின் கொலை, கெட்ட நம்பிக்கை மற்றும் பேச்சு வார்த்தைகளில் ஏமாற்று, பொறுப்பற்ற பயங்கரவாதம் என்பவைதான் அரசியல் சம்பவத்தின் முக்கியத்துவம் மற்றும் அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புகளின் முக்கியத்துவம் என்பனவற்றை ஜீரணிக்க முடியாத ஒரு தலைவரின் தனித்தன்மையாக உள்ளது. எல்.ரீ.ரீ.ஈ ஒரு கனவு உலகத்தில் வாழ்ந்து மறைந்துவிட்டது.

## குடும்ப அரசியலுக்கு சரியான தண்டனை



குடும்ப அரசியலுக்கு மக்கள் சரியான தண்டனை கொடுத்திருக்கிறார்கள் என சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் ஆர்.சரத்குமார் தெரிவித்துள்ளார்

நாடாளுமன்ற தேர்தல் முடிவு குறித்து சென்னையில் நேற்று முன்தினம்அவர் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது, தமிழகத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது மகிழ்ச்சியான விடயமாகும்.

ஊழல், குடும்ப அரசியல், ஆணவ பேச்சு இவை எல்லாவற்றையும் இந்த தேர்தல் மூலம் மக்கள் துடைத்து எறிந்துள்ளனர். சந்தர்ப்பவாத அரசியலுக்கு மக்கள் சரியான தண்டனை கொடுத்து இருக்கிறார்கள். தி.மு.க. கட்சியை பொறுத்த வரை முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி சொன்னது நடந்துவிட்டது. இதுகுறித்து அவர் இனிப்பு வழங்கி கொண்டாடுகிறார் என்றெல்லாம் கூறுகிறார்கள். இதில் தவறு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. ஏனெனில் மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு முன்னால் எதுவும் இல்லை.

தமிழகத்தில் தற்போது நிலையான, நேர்மையான, உறுதியான நல்லாட்சி தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடந்து வருகிறது. இதனை அறிந்து, அவர் செய்த சாதனைகளை மனதில் வைத்து மக்கள் அவரை வெற்றி பெற செய்துள்ளனர். இந்த வெற்றி இனி வரப்போகும் எல்லா தேர்தல்களிலும் தொடரும் என்றார்.

# நல்லூர் திருவிழாக் கடமையில் பொலிஸார் சீருடையில் இருப்பது சிறந்தது

## ஆலயம் சார்பாக தெரிவிப்பு

நல்லூர் திருவிழாக் காலங்களில் பாதுகாப்புக் கடமையில் பொலிஸார் சீருடையில் இருப்பது சிறந்தது என நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயும் கூட்டம் கடந்த வெள்ளியன்று யாழ். மாநகர சபையில் இடம் பெற்றது. இதன்போது ஆலயம் சார்பாக கலந்துகொண்டோரி னால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் சிவில் உடையில் நின்றால் யார் பொலிஸார் என புரியாமல் பல பிரச்சினைகள் எழுகின்றன.

எனவே இம்முறை சீருடை தரித்த பொலிஸார் கடமையில் அமர்த்தவேண்டும் திருட்டு தொடர்பில் புலனாய்வுக்காக சிவில் உடையில் பொலிஸார் கடமையில் இருக்கலாம். ஆனாலும் அதிகளவில் சீருடையில் இருப்பது சிறந்தது.

தீர்த்தத் திருவிழாவின்போது சில விஷமிகளால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளால் குழாய்கள் உடைக்கப்பட்டு தீர்த்த நீர் வீணாக்கப்பட்டது. இம்முறை அவ்வாறு இடம்பெறாவண்ணம் தடுக்க வேலி அமைக்கப்பட்டாலும் பொலிஸாரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

கடந்த ஆண்டு பொலிஸாரின் சேவை திருப்திகரமாக இருந்தது. இது பாராட்டிற்குரியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நடைபெற்று...

முடியாதவை. இந்தப் பயங்கரவாதத்திற்கு முடிவு காணப்படாமல் இருந்திருந்தால் இன்னும் பல உயிரிழப்புகளும் அழிவுகளும் ஏற்பட்டிருக்கும். வெளிநாடுகளில் தீவிரப் போக்குடைய சிலர் நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தை உருவாக்க முற்படுகின்றார்கள். இந் நாட்டில் வாழும் மூவினங்களின் பாதுகாவலன் என்ற ரீதியில் இதற்கு இடமளிக்க மாட்டேன். தற்போது இலங்கை இராணுவத்தில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஊடாகவே தீர்வு காண முடியும்.

தேசியப் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்குரிய இடம்தான் நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## போர் வெற்றி...

பிரபாகரனுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க யாரும் இல்லை. இதன்காரணமாக அவரால், இலங்கைக்கு அப்பால் உலகத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. அதன்காரணமாக பாரிய அரசியல் மற்றும் போரியல் தவறுகள் இடம்பெற்றன.

இவையாவும் தனி ஒருவர் ஒரு இயக்கத்திலோ அல்லது அரசாங்கத்திலோ முடிவை மேற்கொள்கின்றபோது அது ஆபத்திலேயே முடியும் என்பதை உணர்த்துகிறது.

இலங்கை அரசாங்கம் புலம்பெயர்ந்த தமிழர்களை தடை செய்தமையானது தீவிரவாதிகளுடன் ஏனைய தமிழர்களையும் ஒன்றாக கருதுவதை காட்டுகிறது. இது அனைத்து தமிழர்களையும் பயம் கொள்ளவைக்கும் செயற்பாடாகும்.

இந்தியாவை பொறுத்தவரை ராஜீவ் காந்தியின் பின்னர் வலுவான செயற்பாடு இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் இல்லை. இந்தநிலையில் நரேந்திர மோடியின் செயற்பாடு குறித்து முன்னதாகவே கருத்துக்கூற முடியாது.

சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக இலங்கையின் சமாதானத்துக்கு பாதிப்பு ஏற்படுவதாக இலங்கை அரசாங்கம் கூறுகிறது. எனினும் இது உண்மைக்கு புறம்பானது.

அத்துடன் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தவும் ஜன நாயகத்தை நிலைநாட்டவும் அரசாங்கத்துக்கு ஏன் இயலாமல் போனது என்றும் சொல்ஹெய்ம் கேள்வி எழுப்பினார்.

## கீரிமலை...

மக்கள் சென்று தமது பிதிர்க்கடனை நிறைவேற்றியதுடன், அதன் பின்னரான அன்னதான நிகழ்விலும் பங்கேற்றனர்.

இந்த நிலையில் இந்த பிதிர்க்கடன் நிகழ்வை தமது அரசியல் தேவைக்காக பயன்படுத்தும் வகையில் மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம், கஜதீபன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆகியோர் முயன்றுள்ளனர்.

அனந்தி சசிதரன் சேந்தாங்குளம் ஊடாகவும், சிவாஜிலிங்கம் வல்வெட்டித்துறை ஊடாகவும், கீரிமலைக்கு தமது அரசியலுக்காக வந்தவேளை இராணுவத்தினரால் தடுக்கப்பட்டனர். அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மற்றும் கஜதீபன் ஆகியோர் பகல் 11.30 மணியளவில் நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி கீரிமலைக்கு சென்று அன்னதானத்தில் கலந்துகொண்டனரே தவிர உயிரிழந்தவர்களுக்கான எந்தவொரு நிகழ்விலும் கலந்து கொள்ளவில்லை. மாறாக தமது அரசியலுக்காகவே உயிரிழந்தவர்களையும் இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இவர்களின் போலி அரசியல் செயற்பாடுகளை தமிழ் மக்கள் விரைவில் உணரக்கூடிய காலம் வரும்.

வடமாகாண சபை உறுப்பினராக முள்ளிவாய்க்காலில் சத்தியப் பிரமாணம் செய்த சிவாஜிலிங்கம் அங்கே சென்று விளக்கேற்றல் செய்திருக்கலாமல்லவா? ஏன் கீரிமலைக்கு செல்ல முயற்சித்து குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்தார்கள்.

நேற்றைய பிதிர்க்கடன் நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது மாகாண சபை உறுப்பினர்கள் ஒரு ரூபா காசு செலவழித்தார்களா? இறந்த ஆத்மாக்களை வைத்து அரசியல் நடத்துவதனை இனியாவது இவர்கள் கைவிட வேண்டும்.

இதேவேளை நேற்று முன்தினம் 0215672222 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்ட சிலர் நீங்கள் கீரிமலையில் நடத்தவுள்ள பிதிர்க்கடன் நிகழ்வை கைவிடுங்கள். அவ்வாறு கைவிட்டு விட்டு இராணுவத்தால் அச்சுறுத்தல் இருந்தபடியால் அதனைக் கைவிட்டு விட்டேன் எனக் கூறுங்கள். இது தொடர்பாக சம்பந்தனுடன் தொடர்புகொள்ளுங்கள் என நேற்று முன்தினம் நள்ளிரவு தாண்டியும் தொல்லை கொடுத்தனர்.

எனவே இறந்தவர்களின் மேல் ஏறிநின்று அரசியல் நடத்தும் செயற்பாட்டை கூட்டமைப்பு கைவிடவேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (25)

## பணிப்பகிஷ்கரிப்பு

சம்பள உயர்வு உள்ளிட்ட பல வேறு விடயங்களை முன்வைத்து எதிர்வரும் யூன் மாதம் 3 ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை நடத்த பல்கலைக் கழக பேராசிரியர்களின் தொழிற் சங்கம் தீர்மானித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் சந்திர குப்தா தேனுவர இதனைத் தெரிவித்துள்ளார். ஏற்கனவே தங்களின் கோரிக்கை தொடர்பில் உயர்கல்வி அமைச்சு வழங்கிய உறுதிமொழிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்று...

பின்னதாக கிரேப்யூவினால் தயாரிக்கப்படும் அறிக்கை அடுத்த வருடம் யூலை மாதம் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## ஜனாதிபதி...

நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் ரஷ்யாவின் ஜனாதிபதி விளாட்டிமீர் புட்டின் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஐ.நா.வின்...

மகிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பிடம் கோரிக்கை விடுத்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 1999 ஆம் ஆண்டில் முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பர்வேஷ் முஷாரப்பின் விமானத்தை கடத்த முயற்சித்ததாக தற்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப் மீது குற்றம் சுமத்தப்பட்ட போது, அவருக்காக சட்டத்தரணி அஷேன் வாதாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மர்மப்...

வீதியில் கிடந்த உருண்டை வடிவிலான இனம் தெரியாத மூன்று பொருட்களை கண்டெடுத்துள்ளார்.

அந்த மூன்று பொருட்களில் இரண்டை தனது காற்சட்டை பைகளில் வைத்ததுடன், மிகுதி ஒன்றினை கையில் வைத்து எறிந்து விளையாடியுள்ளான்.

இதன்போது, எறிந்த குறித்த பொருள் பெரும் சத்தத்துடன் வெடித்ததாகவும் இதனால் சிறுவன் படுகாயமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கற்கைநெறிக்காக விண்ணப்பம் கோரல்

(யாழ். நிருபர்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகம் பொறியியல் மற்றும் விஞ்ஞானத் துறையில் பட்டம் பெறுவதற்கான அடிப்படை கற்கைநெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஒரு வருட காலத்தில் இக் கற்கைநெறியினை நிறைவுசெய்தவுடன் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறையில் பட்டப் படிப்புக்கான தேர்வினை பெறலாம்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்திபெறத் தவறியவர்கள் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

இக்கற்கைநெறியை இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையங்களில் பதிவு செய்து பட்டப்படிப்பினை தொடர முடியும். விண்ணப்பப் படிவ கட்டணம் 350 ரூபாவாகும். (10)

# நுணாவில் தேவாலயத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

(சாவகச்சேரி)

இலங்கை அமெரிக்கன் மிஷன திருச்சபையின் நுணாவில் தேவாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஞாயிறு ஆராதனையில் இறுதிப் போரில் உயிர்நீத்த பொதுமக்களுக்காக ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்திக்கப்பட்டது.

மிஷன் தலைவர் வண. பிதா கினோக் புனிதராஜா தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனையில் நுணாவில் திருச்சபை குரு வண.பிதா தேவராஜா அடிகளார் மற்றும் பங்கு மக்களும் கலந்து கொண்டனர்.

இதில் 3 பொதுமக்கள் திரு நிலைப்படுத்தல் நிகழ்வில் பங்கு பற்றியிருந்தனர். (11)

# மோடி மற்றொரு ராஜபக்ஷ அமைச்சர் பசில் புகழாரம்

(கொழும்பு)

இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடியை மற்றுமொரு ராஜபக்ஷவாக நோக்குவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் போன்றே நரேந்திர மோடியும் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் அரசாங்கம் உள்நாட்டு அரசியல் அழுத்தங்கள் காரணமாக இலங்கையுடன் உரிய முறையில் உறவுகளைப் பேணத் தவறியிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், நரேந்திர மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி பெரும்பான்மையுடன் தேர்தலில் வெற்றியீட்டியதனால், இலங்கையுடனான உறவுகள் வலுப்பெறும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதனைப் போன்றே நரேந்திர மோடியும் குஜராத் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியவர் என பசில் ராஜபக்ஷ, மோடிக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

ஜனாதிபதி. மகிந்த பிராந்திய உலக அரசியல் தொடர்பிலான ஞானமுடையவர் எனவும், அதனகாரணமாகவே மோடி பிரதமராக அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்திருந்தார் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவுடன் மிக நெருக்கமாக கடமையாற்ற உத்தேசித்துள்ளதாகவும் நீண்ட கால அடிப்படையில் கொள்கைகள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த சா/த விண்ணப்பங்கள் ஏற்பு

2014 ஆம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதியுடன் நிறைவடையும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 20 ஆம் திகதி வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

## கூட்டமைப்பு...

அப்பகுதி மக்கள் விரட்டியடித்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை 5.00 மணியளவில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், வடமாகாண அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் மற்றும் கஜதீபன் ஆகியோர் திடீரென உள்நுழைந்து இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப் போகிறோம் என்ற வேளை, அங்கிருந்தவர்கள் உண்மையான போராளிகள் எல்லோரும் இறந்துவிட்டார்கள். அவர்களின் பெயரைக் கூறி போலி முகத்துடன் இங்கு அஞ்சலி செலுத்த வேண்டாமெனக் கூறி அனுப்பி வைத்தனர்.

இதன்பின் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தேங்காய்களுடன் வந்து அஞ்சலி செலுத்தப் போவதாக தெரிவித்த வேளை, இங்கு தேங்காய் எதுவும் அடிக்க வேண்டாம். வேறு இடத்தில் கொண்டுசென்று அடியுங்கள் என மக்கள் தெரிவித்தனர். எனினும் அவர் மக்களின் அறிவுரையை கேட்காமல் நடக்க முயன்றதால் அவர் கொண்டுவந்த தேங்காய்களை பறித்து எறிந்து அவரையும் மக்கள் விரட்டியடித்தனர்.

இந்தச் சம்பவங்களால் நேற்று மாலை வீரமாகாளி அம்மன் ஆலயப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பான நிலை காணப்பட்டது.

# மோடிக்கு விசேட செய்தி அனுப்பவுள்ள ஜனாதிபதி

(கொழும்பு)

இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முன்னேற்றமடையும் என்று நம்பிக்கையை வெளிப்படுத்தும் சிறப்புச் செய்தி ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுப்பி வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பொறுப்பேற்கும் நாள் உறுதிப்படுத்தப்பட்டவுடன், இந்தக் கடிதம் முறைப்படி அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்துடன், உறவுகள் முன்னேற்றமடையும் என்று இலங்கை நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க. தலைவர்களுள் ஒருவரான சுஸ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழுவினர் 2012 ஆம் ஆண்டு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

சுஸ்மா சுவராஜ் அந்தப் பயணத்தை மிகவும் சாதகமானதாகவே கருதியிருந்தார். புதிய அரசாங்கமும் அவரது அந்த அணுகுமுறையையே பின்பற்றும் என்று இலங்கை நம்புகிறது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்கும் நிகழ்வுக்கு, பிரதிநிதிகளை அனுப்பி வைப்பது குறித்து அரசாங்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

## அரசிலிருந்து விலகவுள்ளதாக எச்சரிக்கிறார் ஹக்கீம்

பல்வேறு காரணங்களை முன்வைத்து தாம் அரசாங்கத்தில் இருந்து வெளியேறப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம், இது தொடர்பில் தெரிவிக்கையில், அமைச்சு பதவிக்காகவே காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்திருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக நேற்று செய்தி நிறுவனம் ஒன்றிடம் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தமது கட்சி அந்த நோக்கத்தை மாத்திரம் கொண்டிருக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். எனவே அரசாங்கத்தில் இருந்து விலகிச் செல்வதற்கு தயங்கப் போவதில்லை என்றும் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 7 ஆவது ஐ.பி.எல்

**சென்னை 138/4**

சுரேஷ் ரெய்னா - 62
டேவிட் ஹஸி - 25
மக்கலம் - 19
அரோன் 2 விக்கெட்டுக்கள், முரளி 1 விக்கெட்.

**பெங்களூர் றோயல் 142/5** (19.5)

கிறிஸ் கெய்ல் - 48
டி.வில்லியர்ஸ் - 28
யுவராஜ் - 13 (ஆ.இ)
ஹோலி 27-
டேவிட் ஹஸி, அஸ்வின் தலா 2 விக்கெட்டுக்கள்
பெங்களூர் றோயல் 5 விக்கெட்டுக்களால் வெற்றி
ஆட்ட நாயகன் - டேவிட் ஹஸி

**ஹைதராபாத் 142/8**

ஒஜா - 22
வோனர் - 34
இர்பான் பதான் - 23 (ஆ.இ)
யாதவ் 3 விக்கெட், சகீப் அல்ஹசன் 2 விக்கெட்.

**கெல்கத்தா 146/3** (19.4)

உத்தப்பா - 40
பாண்டே - 35
யூசுப்பதான் - 39 (ஆ.இ)
டஸ்சற் - 25 (ஆ.இ)
ஸ்ரெயின், சர்மா தலா 1 விக்கெட்
கொல்கத்தா 7 விக்கெட்டுக்களால் வெற்றி
ஆட்ட நாயகன் - உமேஸ் யாதவ்

## யாழ். நோக்கிவந்த இ.போ.ச. மீது தாக்குதல்

(கொழும்பு)

அக்கரைப்பற்றில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்சில் பயணம் செய்தவர்கள் மீது மன்னம்பிட்டியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. அக்கரைப்பற்றில் இருந்து மட்டக்களப்பு ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் மீது மன்னம்பிட்டியில் வைத்து ஒருவர் கற்களினால் தாக்குதல் நடத்தி பஸ்ஸின் கண்ணாடிகளை உடைத்துள்ளார்.

இதன்போது பஸ்ஸின் நடத்துனருடன் பொதுமக்களும் இணைந்து குறித்த நபரை பிடித்து தாக்கியுள்ளனர்.

இந்தவேளையில் அப்பகுதியில் ஒன்றுகூடிய 25 இற்கும் மேற்பட்டவர்கள் குறித்த பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் சிலர் அடிகாயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் குறித்த பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கதுறுவெல பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை தீவிரவாத நபர்; தகவல் திரட்டவுள்ள இந்தியா

(கொழும்பு)

இலங்கை தீவிரவாத சந்தேக நபர் குறித்து இந்தியா தகவல்களை திரட்டவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இலங்கையர் ஒருவர் அண்மையில் மலேசியாவில் கைது செய்யப்பட்டிருந்தார். இந்தியாவின் முக்கிய வெளிநாட்டு தூதரகங்கள் மீது தாக்குதல் நடாத்த குறித்த நபர் திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த இலங்கையர் குறித்து, இந்தியா விசாரணைகளை நடாத்த உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழக பொலிஸார் இராஜதந்திர ரீதியில் மலேசிய அரசாங்கத்தை அணுகி, குறித்த இலங்கை சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களை திரட்டுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## சடலம் ஒப்படைப்பு

தூக்கிட்டு தற்கொலை [illegible]ப்துகொண்டதாகக் கூறி சுன்னாகம் பொலிஸாரினால் பாடசாலை மாணவன் ஒருவனின் சடலம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் நேற்று மாலை 6.30 மணியளவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மல்லாகம், கோட்டைக்காட்டை சேர்ந்த சத்தியலிங்கம் மதுசன் (வயது - 14) என்பவரின் சடலமே பொலிஸாரினால் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவருடைய மரணத்திற்கான காரணம் இது வரை தெரியவில்லை. இன்று மரண விசாரணையும் பிரேத பரிசோதனையும் நடைபெறவுள்ளன.

## நோர்வே தூதரகம் முன்பாக ஹெல உறுமய ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்க வேண்டாம் எனக் கோரி, கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள நோர்வேத் தூதரகத்திற்கு முன்பாக ஜாதிக ஹெல உறுமய இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்துள்ளது.

'போர் வெற்றியைத் தக்க வைத்துக்கொள்வோம்', 'பயங்கரவாதம் தலைதூக்க இடமளியோம்', 'விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்குவதை நிறுத்து' போன்ற பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியில் நெடியவனை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு வலியுறுத்தி, ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

### முருங்கன் விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

## மன்னார் வைத்தியசாலை மீது பெற்றோர் குற்றச்சாட்டு

முருங்கன் - சிலாபத்துறை பிரதான வீதியில் இடம் பெற்ற விபத்து ஒன்றில் 17 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் குறித்த சிறுவனின் மரணத்திற்கு மன்னார் பொது வைத்தியசாலைத்தரப் பினரின் அசமந்தப்போக்கே காரணம் என சிறுவனின் பெற்றோரும் உறவினர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முருங்கன் மருதமடு கிராமத்தைச் சேர்ந்த தே.சுலைக்சன் (வயது - 17) என்ற சிறுவனே விபத்தில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் தனது வீட்டில் இருந்து பரிகாரிக்கண்டல் பகுதியில் உள்ள பண்ணைக்கு பால் கொடுத்து விட்டு வீடு நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போது முருங்கன் சிலாபத்துறை பிரதான வீதியால் வந்து கொண்டிருந்த சிறிய ரக வாகனம் சிறுவன் மீது மோதியுள்ளது.

காயமடைந்த நிலையில் குறித்த சிறுவன் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அங்கு உரிய சிகிச்சை வழங்கப்படவில்லை என பெற்றோர் தெரிவித்தனர்.

நீண்ட நேரத்திற்கு பின்னரே சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் பெற்றோர் கூறினர். நீண்ட நேரத்தின் பின் காலை 11.30 மணியளவில் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் இருந்து கொழும்பிற்கு அம்புலன்ஸ் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட போது வழியில் சிறுவன் உயிரிழந்துள்ளதாகவும் சடலம் புத்தளம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வாகனத்தின் சாரதியை முருங்கன் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம் பெறுவதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆஸிக்கு சிறுவர் கடத்தல்; பிரதான சூத்திரதாரி கைது

கடல் வழியாக சிறுவர்களை அவுஸ்ரேலியாவுக்கு கடத்தல் வர்த்தகத்தில் ஈடுபட்ட நபர் ஒருவர் முந்தல், உடப்பு பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவின்படி முந்தல் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர் கடத்தல் வர்த்தகம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற தகவலைத் தொடர்ந்து, அதிகாரிகளினால் கோட்டை நீதவான் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்போது சந்தேகநபரை கைது செய்து நிதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி முந்தல் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்காக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.